பக்கங்கள் : பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 மாசி 24 வெள்ளிக்கிழமை (07.03.2008)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 102

# யாழ். மாவட்ட எம்.பி. சிவநேசன் கிளைமோர் தாக்குதலில் பலியானார்!

## ஆழ ஊடுருவும் படையணி மீது குற்றச்சாட்டு





வவுனியா, மார்ச்7

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கிட்டிணர் சிவநேசன் (வயது - 51) நேற்றுப் பிற்பகல் 1.20 மணியளவில் வன்னியில் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் பலியானார். அவரின் வாகனச் சாரதியும் இச்சம்பவத்தில் உயிரிழந்தார்.

இலங்கை நாடாளுமன்றின் அமர்வில் கலந்துகொண்ட பின்னர் நேற்று விடிகாலை கொழும்பில் இருந்து புறப்பட்டு வன்னியில் தமது வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த வேளையில், கனகராயன் குளத்துக்குச் சமீபமாக உள்ள குள்ளர்குயிலங்குளம் என்ற இடத்திலேயே அவரது வாகனம் கிளைமோர்த் தாக்குதலுக்கு இலக்கானது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் ஊடுருவியுள்ள இலங்கை இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையணியே இந்தத் தாக்குதலை நடத்தியிருப்பதாக விடுதலைப் புலிகளின் வட்டாரங்கள் குற்றம் சுமத்தின.

கடந்த பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ். மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றியீட்டி எம்.பியானார்.

கடந்த தடவை நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்வதற்காக வன்னியிலிருந்து கொழும்புக்கு வந்த சமயம் மதவாச்சி சோதனைத் தடை நிலையில் தாம் அகௌரவமாக நடத்தப்பட்டார் என்றும், தமது வாகனமும் பொதிகளும் மிக இறுக்கமாகச் சோதனையிடப்பட்டன என்றும் சிவநேசன் நாடாளுமன்றில் குற்றம் சுமத்தியிருந்தார். தமது நாடாளுமன்றச் சிறப்புரிமை இதன் மூலம் மீறப்பட்டுள்ளதாகவும் அவர் சபையில் தெரிவித்திருந்தார்.

''அவரது வாகனமே இப்போது இலக்கு வைத்துத் தாக்கப்பட்டிருக்கின்றது. இராணுவத்தின் விசேட அணியே ஊடுருவி இத் தாக்குதலை நடத்தியிருக்கின்றது.'' - என்று புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலில் வாகனச்சாரதி அந்த இடத்திலேயே உயிரிழந்தார். படுகாயமடைந்த சிவநேசன் எம்.பியை வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு வர முடிவு

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஆர்பர் அம்மையார் பதவி விலக முடிவு

ஜெனிவா,மார்ச்.7

ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் அம்மையார் (வயது - 61) எதிர்வரும் ஜூன் 30ஆம் திகதியுடன் பதவியை விட்டு விலகுகின்றார். அதற்கான இராஜினாமாக் கடிதத்தை ஐ.நா. செயலாளர் நாயகம் பான் - கீ - மூனுக்கு அவர் அனுப்பி வைத்துவிட்டார் எனக் கூறப்படுகின்றது.

தனது நான்கு வருட பதவிக்காலம் முடியும் வேளையில் அதில் தொடர்ந்து நீடிக்க விரும்பாமல் பதவி விலக அவர் தீர்மானித்திருக்கின்றார். முன்னாள் கனேடிய உயர் நீதிமன்ற நீதியரசரான ஆர்பர் அம்மையார்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிவநேசன் எம்.பியின் படுகொலைக்கு அரசு பதில் சொல்லியே ஆகவேண்டும்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கண்டித்து அறிக்கை

கொழும்பு,மார்ச்7

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை வன்மையாக கண்டித்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - இப்படுகொலைக்கான பொறுப்பை அரசு தட்டிக் கழிக்க முடியாது; பதில் சொல்லியே ஆக வேண்டும் என வற்புறுத்தியிருக்கிறது.

நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் கிளைமோர்த் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் துணைத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன், இன்று (நேற்று) நண்பகல் மாங்குளத்திற்கு அண்மையில் ஏ-9 வீதியில் கிளைமோர்த் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளார் என்ற செய்தி எமக்குப் பெரும் அதிர்ச்சியையும் ஆழ்ந்த மனவேதனையும் தந்திருக்கிறது. இப்படுகொலையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாக கண்டிக்கிறது.

(12ஆம் பக்கம் பார்க்க)

### மனித உரிமை மீறல்கள் தொடர்பான

## விசாரணைகளைக் கண்காணிப்பதிலிருந்து சர்வதேச பிரமுகர்களின் அணி விலகியது!

கொழும்பு,மார்ச்7

பல்வேறு படுகொலைகள் உட்பட்ட மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து ஆராய்வதற்கு அமைக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகளைக் கண்காணிக்கும் பொறுப்பிலிருந்து சர்வதேச சுயாதீன பிரமுகர்கள் பதினொரு பேரைக் கொண்ட - நீதியரசர் கே.என்.பகவதி தலைமையிலான - அணி நேற்று விலகிக் கொண்டுவிட்டது.

மேற்படி ஜனாதிபதி ஆணைக்குழுவின் பகிரங்க விசாரணைச் செயற்பாடு சர்வதேச வழமைகளுக்கும் தரங்களுக்கும் ஏற்ப அமையவில்லை என்று குற்றம் சுமத்தி, அதிருப்தி தெரிவித்தே மேற்படி குழு பணியிலிருந்து விலகிக் கொண்டிருக்கின்றது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் மகாசிவராத்திரி பக்திபூர்வமாக அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்.7

குடாநாட்டில் உள்ள சிவன் ஆலயங்களில் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் நேற்று இரவு மகா சிவராத்திரி விரதத்தைப் பக்திபூர்வமாக அனுஷ்டித்தனர்.

கீரிமலை நகுலேஸ்வரர், காரைநகர் ஈழத்துச் சிதம்பரம், நல்லூர் சிவன் ஆலயம், வண்ணை சிவன் ஆலயம் உட்பட பல்வேறு சிவன் ஆலயங்களிலும் பக்தர்கள் பெரும்எண்ணிக்கையில் கூடினர்.

நான்கு சாமப் பூஜைகளும் விசேட

(12ஆம் பக்கம் பார்க்க)

## பணியைத் தொடர ஜனாதிபதி கோரிக்கை

கொழும்பு,மார்ச்7

மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவினைக் கண்காணிக்கும் சர்வதேச பிரமுகர்கள் குழு தங்களது பணிகளை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டுமென ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார்.

மேற்படி ஆணைக்குழுவின் பணி நிறுத்தம் தொடர்பான அறிவிப்பை ஏற்றுக்கொள்ள ஜனாதிபதி மறுத்துவிட்டார் என்று ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஆள்கடத்தல்கள், காணாமற்போதல் சம்பவங்களுக்கு அரசே பொறுப்பு!

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் தனது புதிய அறிக்கையில் குற்றச்சாட்டு

நியூயோர்க், மார்ச்7

இலங்கையில் பரந்த அளவில் இடம் பெறும் ஆள்கடத்தல்கள், காணாமற்போதல் விவகாரம் ஒரு தேசிய நெருக்கடியாகியிருக்கின்றது. அதற்கு இலங்கை அரசே பொறுப்பு.

- இப்படி அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம்(Human Rights Watch) நேற்றுவெளியிட்ட தனது புதிய அறிக்கையில் அப்பட்டமாகக் குற்றம் சுமத்தியிருக்கின்றது.

காணாமற் போகச்செய்யும் நடைமுறையை உடன் நிறுத்துமாறும் -

காணாமற் போனோர் எங்குள்ளார்கள் என்பதை வெளிப்படுத்தும்படியும் -

காணாமற் போகச் செய்யும் நடவடிக்கைகளுக்குக் காரணமான சூத்திரதாரிகளை அதற்குப் பொறுப்பாக்கி அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படியும் -

மனித உரிமைகள் கண்காணிப்பகம் இலங்கை அரசை இந்த அறிக்கையில் கோரியிருக்கின்றது.

(12ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



கொமர்ஷல் வங்கி யாழ். கிளையின் வருடாந்த 'அருணலு' பரிசளிப்பு நிகழ்வு நேற்றுக் காலை இடம்பெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் வலய ஆரம்பப் பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் கே.மாதவக்குமார், கிளை முகாமையாளர் எஸ்.ரவீந்திரா ஆகியோர் உரையாற்றுவதை முதல் இருபடங்களிலும் காணலாம். அருகில் கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாலய அதிபர் க.செல்வகுமாரன், அராலி சரஸ்வதி வித்தியாலய அதிபர் க.சோமசேகரம் ஆகியோர் அமர்ந்திருப்பதைக் காணலாம்.

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் மாணவன் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட மாணவ, மாணவிகளையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். (09ஆம் பக்கமும் பார்க்க) (படங்கள்-லக்ஸ்மன்)

# கச்சதீவு கடலருகே இருவேறு சூட்டுச் சம்பவங்கள் தமிழக மீனவர் உயிரிழப்பு; மற்றொருவர் படுகாயம்

## ராமேஸ்வரத்தில் பதற்றம்; கடையடைப்பு

ராமேஸ்வரம், மார்ச்.6

கச்சதீவுக்கு அருகே இலங்கைக் கடல் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீது நேற்றுமுன்தினம் மதியமும், மாலையுமாக நடத்தப்பட்ட இருவேறு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களால் தமிழக மீனவர் ஒருவர் உயிரிழந்தார்; மற்றொருவர் படுகாயமடைந்தார்.

மேற்படி இரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களையும் இலங்கைக் கடற்படையினரே நடத்தியுள்ளனர் என்று ராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இச்சம்பவங்களையடுத்து ராமேஸ்வரம் பகுதியில் நேற்று முழுநாளும் பதற்றம் நீடித்தது. இலங்கைக் கடற்படையினரைக் கண்டிக்கும் வகையில் அப்பகுதியில் நேற்று கடையடைப்பு நடத்தப்பட்டது.

ராமேஸ்வரம் அருகே தங்கச்சிமடம் சூசையப்பர் பட்டினத்தைச் சேர்ந்த மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர். குயின்ராஜ் என்பவருக்குச் சொந்தமான படகில் அக்காள்மடம் மீனவர் கொலனியைச் சேர்ந்த கிறிஸ்டி (வயது - 30) மற்றும் அந்தோனி ராயப்பன் (வயது - 31), மரியகுவிட்டன் (வயது - 20) ஆகியோர் சென்றனர். இந்தப் படகு ஓட்டுநராக மரியபிச்சை (வயது - 42) இருந்தார். பகல் 12.30 மணியளவில் இவர்கள் கச்சதீவு அருகே நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது இலங்கையில் இருந்து 3 சிறிய ரோந்துக் கப்பல்கள் அதிவேகமாக வந்தன. அவை ஒவ்வொன்றிலும் சிங்களக் கடற்படையினர் 6 பேர் இருந்தனர். அவர்கள் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்ட படி வந்தனர் என்றும் -

திரும்பிச் செல்லுமாறு எச்சரித்ததால் திரும்பிச் செல்லும்போது அவர்களை நோக்கிக் கடற்படையினர் கண் மூடித்தனமாகச் சரமாரியாகச் சுட்டனர். இதில் கிறிஸ்டியின் தலையின் பின்புறத்தில் குண்டு ஒன்று பாய்ந்தது. அவர் இரத்த வெள்ளத்தில் கீழே சாய்ந்தார். மற்றவர்கள் படகில் படுத்துக்கொண்டதால் குண்டு மழையில் இருந்து தப்பினார்கள். சுமார் 5 நிமிட நேரம் துப்பாக்கிச் சூடு நடத்தியபின் சிங்களப் படையினர் திரும்பிச் சென்றுவிட்டனர். இரத்த வெள்ளத்தில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த கிறிஷ்டியை எப்படியும் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் தங்கள் படகை அதிவேகமாக கரைக்குச் செலுத்தினர். வழியில் அவர்களின் படகு பழுதடைந்தது. அதை அவசர அவசரமாகச் சரிசெய்து மண்டபம் வடக்குத் துறை முகத்துக்கு மாலை 5.30 மணிக்கு வந்து சேர்ந்தனர் என்றும் - மீனவர்கள் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் காலை தொழிலுக்குச் சென்றவர்களில் தங்கச்சிமடம் ராஜா நகர் பகுதியைச் சேர்ந்த நெப்போலியன் என்பவருக்குச் சொந்தமான விசைப்படகில் சென்ற பிரான்சிஸ் (வயது - 50), செல்வம், ராஜன், ததேயூஸ் ஆகிய 4 பேரும் அடங்குகின்றனர்.

அவர்கள் மாலையில் கச்சத்தீவு அருகே மீன் பிடித்துக்கொண்டிருந்தனர். அப்போது அந்தப் பகுதியில் படகில் ரோந்து வந்து கொண்டிருந்த இலங்கைக் கடற்படையினர் திடீரென இராமேஸ்வரம் விசைப் படகை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். இதில் அந்தப் படகில் இருந்த பிரான்சிஸ்ஸின் முதுகுப் பகுதியை குண்டு துளைத்தது.

படுகாயமடைந்தவ அவர் சிகிச்சை பெறுகிறார் என்றும் மீனவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (சி)

## அராலி ஆலயத் திருட்டுக்கள்: மூவர் நீதிமன்றத்தில் ஆஜர்

யாழ்ப்பாணம்,மார்ச்.7

அராலி மத்தியில் நேற்று முன்தினம் இரவு இரண்டு ஆலயங்களிலும் இரண்டு வீடுகளிலும் ஓடுகளைப் பிரித்து உட்சென்று மின்சாதனங்களைத் திருடிய சம்பவம் தொடர்பாக பொலிஸாரல் கைது செய்யப்பட்ட மூவரும் நேற்று மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் முன் ஆஜர் செய்யப்பட்டனர்.

வட்டுக்கோட்டைப் பொலிஸாரல் ஆஜர் செய்யப்பட்ட நபர்களில் ஒருவர் 10வயது சிறுவன் ஆவார். அவரை இன்று நீதிமனறத்தில் ஆஜர் செய்யுமாறும் மற்றைய இருவரையும் எதிர்வரும் 18ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மற்றும் ஒரு நபரை தேடி வருவதாக வட்டுக் கோட்டைப் பொலீஸார் தெரிவித்தனர். (அ-1)



கிளைமோர் தாக்குதலுக்கு இலக்கான சிவனேசன் எம்.பியின் வாகனத்தையும் உயிரிழந்த அவரது வாகனச் சாரதியையும் படங்களில் காணலாம்.

## பரப்பன்கண்டலை முழுமையாக மீட்டதாக இராணுவம் அறிவிப்பு

கொழும்பு,மார்ச்.7

மன்னார் மாவட்டத்தில் உயிலங்குளத்துக்கு வடக்கே உள்ள சிறிய நகரான பரப்பன் கண்டலை முழுமையாக விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து அரசுப் படைகள் நேற்று விடுத்திருக்கின்றன என்று அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

பரப்பன்கண்டலின் தெற்குப் பகுதியை அரசுப் படைகள் நீண்ட காலமாகத் தமது கட்டுப்பாட்டில் தொடர்ந்து வைத்திருந்தன என்றும் -

ஏனைய பகுதிகளில் நிலைகொண்டிருந்த புலிகள் கடந்த சில மாதங்களாகப் படையினரின் முன்னேற்ற முயற்சிகளைத் தடுத்து வந்தனர் என்றும் -

நேற்றுக்காலை திடீரென தாம் மேற்கொண்ட ஓர் அதிரடி நடவடிக்கை மூலம் அப்பகுதிகளைப் படையினர் புலிகளின் பிடியிலிருந்து மீட்டெடுத்தனர் என்றும் -

பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்று மதியம் அறிவித்தனர்.

படைத்தரப்பைப் பொறுத்த வரை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பரப்பன் கண்டல் மீட்கப்பட்டமை வன்னிப் படை நகரில் ஒரு பெரும் திருப்பு முனை என்றும் பாதுகாப்பு வட்டாரங்களில் கூறப்பட்டது.

படையினர் தாம் புதிதாகக் கைப்பற்றிய பிரதேசங்களில் தமது பாதுகாப்பைப் பலப்படுத்தி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (சி)

## சுவாமி சிதானந்தா நினைவு தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,மார்ச்.7

சுவாமி சிதானந்தா சரஸ்வதி யோகியின் நினைவு தின நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணியளவில் நல்லூர் திவ்யஜீவன சங்க மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

பூஜை, பஜனை, சிறப்பு சொற்பொழிவுகள் இடம்பெறும். அன்பர்கள், ஆதரவாளர்கள் நலன் விரும்பிகள் அனைவரையும் சமூகமளிக்குமாறு திவ்யஜீவன சங்க சமூகம் கேட்டுள்ளது. (1)


## மரண அறிவித்தல்

### திருமதி ஆறுமுகம் இரத்தினம்

வர்ணன், அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், பத்தமேனியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் இரத்தினம் நேற்று (06.03.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற அப்பாக்குட்டி ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் குகநேயன் (ஜேர்மனி), அமரர் குகதாஸன் (சிவம்), குகபாலன்(கனடா), குகசீலன்(கனடா), குகபாலினி, குகநாயகி (கனடா), குகமதி(கனடா), குகராதினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் இராசேஸ்வரி, நிர்மலாதேவி(கனடா), ஆனந்தகுமாரி (கனடா), இராதுரை(ஆசிரியர், அச்சுவேலி மத்திய கல்லூரி), தனபாலசிங்கம் (கனடா) உதயகுமார்(கனடா) அமிர்தலிங்கம் (விஞ்ஞான ஆய்வு கூட உதவியாளர், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் மாமியாரும், கணேஷ், திந்துனா, கீர்த்தனா, பிரவினா, கஜன், கனுசியா, கிரிசாந்தன், இரகுநாதன், பிரியா, திவர்ணன், ஜெயசீலன், பகீரதி, தாரணி, சோபினி, கேசவன், மாதங்கி, தர்சினி, யதீசன், சரணிகா, ஜனனிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.03.2008) வெள்ளிக்கிழமை பி.ப 1 மணியளவில்அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தீர்த்தாங்குளம் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றர், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இ.இராசதுரை(ஆசிரியர்)
பத்தமேனி, அச்சுவேலி
(a)
தகவல்:
குடும்பத்தினர்.

## தேவை

புறோயிலர், ஊர்பேடு ஆகியன உடன் தேவை. தாசன் பாம்,
158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

## Car For Sale

Toyato Corolla, 19-SE Limited,
mint condition. white.
Fixed Price 1.1 million
Contact 0774497993

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

மலர்வு 1947 ★ 08 ★ 27



உதிர்வு 2008 ★ 02 ★ 06

### திருமதி பராசக்தி துரைசிங்கம்

அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலி இன்று (07.03.2008) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அதேவேளை இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வேம்போலை,
இணுவில் கிழக்கு,
இணுவில்.
(b)
தகவல்
க.துரைசிங்கம்
(ராஜா தியேட்டர் ஒப்பிறேட்டர்)

# கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு 'நிக்கொட்' 37 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,மார்ச்7

யாழ்.மாவட்டத்தின் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக முதல் காலாண்டுக்கென 'நிக்கொட்' அமைப்பு 37 மில்லியன் ரூபா நிதியுதவியை வழங்கியுள்ளது. இத்தகவலை அமைப்பின் யாழ். மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்நிதி கட்டடம், நீர் விநியோகம் மற்றும் தள பாடங்கள், கணனி போட்டோ பிரதி இயந்திரம் கொள்வனவு என்பவற்றிற்காகச் செலவிடப்படும்.

இதேவேளை - வேறு பல திட்டங்களும் குறிப்பிட்ட காலாண்டின் அபிவிருத்தி நடவடிக்கையின்கீழ் மேற்கொள்ளப் படவுள்ளன.

சித்த ஆயுள்வேத கல்லூரிக்குப் புதிய அம்புலன்ஸ் வண்டிக் கொள்வனவுக்கு 10 மில்லியன் ரூபாவும் குடா நாட்டின் நெடுந்தீவு, அராலி உட்பட ஏனைய முக்கிய பகுதிகளில் உவர்நீர் உட்புகாது தடுப்பு அணைகள் பத்து அமைப்பதற்கு 32 மில்லியன் ரூபாவும்-

கோப்பாய் வசந்தபுரம் கிராம மின் இணைப்பு வேலைகளுக்கு 5.5 மில்லியன் ரூபாவும் சாவகச்சேரி, சங்கானை, சண்டிலிப்பாய் மற்றும் வடமராட்சி பகுதிகளில் நிறைவு செய்யப்படவேண்டிய வீட்டுத் திட்டத்தின் 92 வீடுகளுக்கென 9.3 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் 'நிகொட்' பிரதித் திட்டப் பணிப்பாளர் தெரிவித்தார். (202-111)

# தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரிக் கிளையில் விரைவில் தன்னியக்கப் பணப்பரிமாற்ற சேவை

யாழ்ப்பாணம்,மார்ச்7

தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரிக் கிளையில் தன்னியக்க பணம் பெறும் இயந்திர சேவை (ATM) விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இலங்கையில் உள்ள அனைத்து தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளுடனான கணனி வலைப்பின்னல் தொடர் பாடல் கருவிகள் சாவகச்சேரிக் கிளையில் பொருத்தப்பட்டுவருவதால் தன்னியக்கப் பணப்பரிமாற்ற சேவை விரைவில் தென்மராட்சி பிரதேச மக் களுக்கு கிடைக்கவுள்ளதாகக் கிளை முகாமையாளர் சி.தணீஸ்வரன் தெரிவித்தார்

அத்துடன் சாவகச்சேரிக் கிளை 'பி' தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளதால் மேலும் பல சேவைகள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (202-207)




# தென்மராட்சிப் பாடசாலைகளில் கணித பாட மதிப்பீடு

யாழ்ப்பாணம், மார்ச் 7

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் தரம் 11 மாணவர்களுக்கான கணித பாட மதிப்பீடு-3 எதிர்வரும் திங்கட்கிழமை நடைபறவுள்ளது.

மதிப்பீட்டிற்கான வினாத்தாள்களை இன்று வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு பாடசாலை அதிபர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் கேட்டுள்ளார். (202-207)




அண்மையில் நெடுந்தீவிற்கு விஜயம் செய்த யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமிதா வசந்தகுமார் நெடுந்தீவுப் பொது நூலகத்தின் சிறுவர் பகுதியைச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைப்பதை முதலாவது படத்தில் காணலாம்.

சிறுவர்களுக்கான நூல் தொகுதியை உதவி ஆணையாளர் பார்வையிடுவதையும் நெடுந்தீவுப் பிரதேச சபைச் செயலாளர் கே.தம்பிராசா மற்றும் நூலக உத்தியோகத்தர் களையும் இரண்டாவது படத்தில் காணலாம். *(படங்கள்: லக்ஸ்மன்)*

# செயலமர்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 7

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளின் ஜி.சீ.ஈ உயர்தர வகுப்புகளில் மேற்பார்வைக் கடமைகளில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் எதிர்வரும் 15 ஆம், 16 ஆம் திகதிகளில் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடை பெறவுள்ளன.

மாணவர்களைச் செயற்றிட்டங்களில் ஈடுபடுத்துவதற்கான மேற்பார்வை அனுபவங்களை மேம்படுத்துவது தொடர்பாக இச்செயலமர்வு நடத்தப்படுவதால் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் கேட்டுள்ளார்.

இந்தச் செயலமர்வுகள் நாளை நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (202-207)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 7

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 10, 11 ஆகிய வகுப்புகளில் சைவசமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 15ஆம் திகதி காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் தெரிவித்தார். (202-207)

## பருத்தித்துறை பஸ் நிலைய கட்டடத்திற்கு மின்னிணைப்பு வழங்குமாறு கோரிக்கை

பருத்தித்துறை,மார்ச்7

பருத்தித்துறை பஸ் நிலையத்தில் உள்ள நேரக் கண்காணிப்பாளர் அலுவலகம், பயணிகள் காத்திருக்கும் மண்டபம் ஆகியவை கொண்ட கட்டடத்திற்கு மின் இணைப்பு வசதி செய்யப்படவேண்டும் என வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மின் இணைப்பு ஏற்படுத்தப்பட்டால் நேரக் கணிப்பாளரின் கடமைக்கும், பயணிகளுக்கும் பெரும் வசதியாக இருக்கும் எனப் பருத்தித்துறை இ.போ.ச.டிப்போ முகாமையாளரால் விடுக்கப்பட்ட இக் கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202-160)

# ஆனைக்கோட்டையில் பிரதேச வைத்தியசாலை; கட்டடப் பணிகள் பூர்த்தியடையும் நிலையில்

ஆனைக்கோட்டையில் கட்டப்பட்டு வரும் மானிப்பாய் பிரதேச வைத்திய சாலையின் கட்டடப் பணிகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன.

இந்த வைத்தியசாலைக்கென மக்களின் நிதிப் பங்களிப்புடன் 20 பரப்புக் காணி ஆனைக்கோட்டையில் கொள்வனவு செய்யப்பட்டது.

இக் காணியில் வெளிநோயோளர்கள் பிரிவுக்கான கட்டடம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது பூர்த்தியடையும் நிலையில் உள்ளன.

எதிர்வரும் ஜூலை மாதம் இப்பிரிவு திறந்துவைக்கப்படும் எனவும் - அதன் பின்னர் மகப்பேற்றுமனை அமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் - வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினர் தெரிவித்தனர்.

இதேவேளை -

துரித அபிவிருத்தித் திட்டத்தின் மகிந்த சிந்தனை நிதியிலிருந்து தண்ணீர் தாங்கி அமைப்பதற்கென 1.2 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதியைப் பயன்படுத்தி 2 ஆயிரம் கலன் தண்ணீர் கொள்ளக்கூடிய தண்ணீர் தாங்கி வைத்தியசாலையில் அமைக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## சட்ட விரோதமாக மின்னிணைப்புப் பெற்ற ஐவருக்கு அபராதத்துடன் நஷ்டஈடும் வழங்கப் பணிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 7

வலி.மேற்குப் பிரதேசத்தில் சட்ட விரோதமாக மின் இணைப்புப் பெற்ற ஐவருக்கு அபராதமும் மின்சார சபைக்கு நஷ்டஈடு செலுத்துமாறும் மல்லாகம் நீதிமன்று தீர்ப்பளித்துள்ளது.

பண்டத்தரிப்பு, வடலியடைப்பு, பிரான்பற்று, விளாவெளி, இளவாலை போன்ற பகுதிகளில் மின்சார சபை ஊழியர்களும் இளவாலைப் பொலிஸாரும் மேற் கொண்ட திடீர் பரிசோதனையின்போது சட்ட விரோதமாக மின்னிணைப்புப் பெற்ற ஐவர் சிக்கினர்.

ஐவரும் மல்லாகம் நீதிமன்றில் ஆயர் செய்யப்பட்டனர். இவர்கள் ஐவருக்கும் அபராதமாகவும் மின்சார சபைக்கு நஷ்டஈடாகவும் ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபா நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டது. (202-29)

# வலி.தென்மேற்குப் பகுதி முதியோருக்கு பிரதேச செயலகத்தாலேயே அ.அட்டை

வலி.தென்மேற்கு,மார்ச் 7

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகத்தாலேயே பிரதேசத்திற்குட்பட்ட முதியவர்களுக்கு முதியோர் அடையாள அட்டைகள் வழங்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதுவரை காலமும் முதியோர் அடையாள அட்டைக்கான விண்ணப்பங்கள் பிரதேச செயலகத்தால் ஏற்கப்பட்டு திருகோணமலையிலுள்ள மாகாண சமூக சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. பின்னர் அங்கிருந்தே அடையாள அட்டைகள் தயாரிக்கப்பட்டு உரியவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு வந்தன.

தற்போது இப்பிரதேச செயலகத் திற்கு அடையாள அட்டை தயாரிக்கும் இயந்திரம் மற்றும் உபகரணங்கள் கிடைத்துள்ளன. இதனையடுத்து இப்பிரிவில் 60 வயதைக் கடந்த முதிய வர்களுக்கு அடையாள அட்டையை பிரதேச செயலகத்தில் தயாரித்து வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (202-135)

## போட்டோப் பிரதி சேவை

பருத்தித்துறை தென்னை, பனை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் போட்டோப்பிரதி எடுக்கும் சேவையை ஆரம்பித்துள்ளது.

கிராமக்கோட்டடியில் உள்ள சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றுவரும் போட்டோ பிரதி எடுக்கும் சேவை குறைந்த கட்டணத்தில் மேற்கொள்ளப் பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.(202-160)

## கால்நடை வளர்ப்போர் கூட்றவுச் சங்கத்தில் தீவனங்கள் விற்பனை

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ்ப்பாணம் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தில் கோழித் தீவனமும் கறவைப் பசுக்களுக்கான தீவனமும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

சங்கத்தால் கொழும்பிலிருந்து யால கப்பல் மூலம் கோழித் தீவனமும் கறவைப் பசுத் தீவனமும் எடுத்து வரப் பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. இவையே தற்போது விற்பனை செய்யப்படுவதாகச் சங்கத்தின் தலைவர் வி.குணபாலன் தெரிவித்தார். (202)

# ஆலய வரலாறுகள் ஆவணப்படுத்தப்பட்டு எதிர்காலச் சந்ததிக்கு வழங்கப்பட வேண்டும்

## யாழ்.பல்கலைக்கழக கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரிகத்துறைத் தலைவர் கருத்து

பருத்தித்துறை,மார்ச்7

ஆலயங்களின் வரலாறுகள் ஆவணப் படுத்தப்பட்டு எமது எதிர்காலச் சந்ததியினருக்கு எடுத்துச் சொல்லப்படவேண்டும். ஆலய வரலாறுகள் மக்கள் இறை விசுவாசத்துடன் சிறந்த, மகிழ்ச்சியான வாழ்வு வாழ்வதற்கு உறுதுணையாக விளங்கும் சின்னங்களாகும்.

மேற்கண்டவாறு பருத்தித்துறை தும்பளை புனித மரியன்னை ஆலயத்தில் 125 ஆவது ஆண்டு நிறைவின் நினைவு மலர் வெளியீட்டு விழாவிலே சிறப்புரையாற்றிய யாழ்.பல்கலைக்கழக கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரிகத் துறைத் தலைவர் அருட்கலாநிதி என்.வி.பிலேந்திரன் அடிகளார் குறிப்பிட்டார்.

தும்பளை புனித மரியன்னை ஆலய முன்றிலில் அருட்திரு.பயஸ் இருதயதாஸ் அடிகளார் தலைமையில்விழா நடைபெற்றது. அருட்கலாநிதி. பிலேந்திரன் அடிகளார் அங்கு தொடர்ந்துரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது,

இத்தகைய வரலாற்று மலர்கள்மூலம் அரிய தகவல் ஆவணப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படும். இவை எதிர்காலச் சந்ததியினர் சமயப்பற்றுதியும் வைராக்கியமும் கொண்ட சமூகச்சிற்பிகளாக வாழ வழி வகுக்கும்.

இன்று வெளியிடப்பட்டுள்ள தும்பளை புனித மரியன்னை ஆலய வரலாற்று நூல் அரிய பொக்கிசமாகும். இந்த ஆலயம் இக்கட்டான காலங்களில் மக்களின் பாதுகாப்பு அரணாகவும் திகழ்ந்துள்ளது. இம் மலரை ஆக்குவதற்கு முன்னின்று உழைத்த அனைவரும் பாராட்டுக்குரியவர்கள் - என்றார்.

தும்பளை புனித மரியன்னை ஆலய அருட்பணிச்சபைச் செயலாளரும் நினைவு மலர் பதிப்பாசிரியருமான எஸ்.அந்தோனிமுத்து வெளியீட்டுரையில் குறிப்பிட்டதாவது:

ஆலயங்கள் மனிதனை நல்வழிப் படுத்தும் சாதனமாகும். ஓர் ஆலயத்தின் வரலாற்றில் அந்த ஆலயத்தை நிர்மாணித்த மூதாதையருக்கும் பெருமைகளுண்டு. அவர்களை நாம் நினைவு கூர்ந்து கௌரவிக்க வேண்டியது எமது கடமை யாகும். 19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்த வெள்ளைக்காரச் சுவாமிமாரின் கடின உழைப்பும் உத்வேகமும் போற்றப்பட வேண்டும் - என்றார்.

இளைப்பாறிய வடமாரட்சி வலய உதவிக்கல்விப்பணிப்பானர் எம்.ஸ்ரீபதி, சட்டத்தரணி எஸ்.ரவீந்திரன் உட்பட இன்னும் பலர் உரையாற்றினர். இந்த வரலாற்று மலரை வெளியிடுவதற்கு முன்னின்று உழைத்த எஸ்.அந்தோனிமுத்து பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டார்.

நூலின் முதற் பிரதியை விழாத் தலைவர் சிறப்பு விருந்தினரான பாலேந்திரன் அடிகளாருக்கு வழங்கினார். (202-218)

# வெங்காயச் செய்கையாளர் நட்டமுறாமல் இருக்க அதனைப் பதப்படுத்திப் பயன்படுத்தும் முறை அறிமுகம்

வெங்காயத்தை பதப்படுத்தி பாவிக்க முடியுமா?

குடாநாட்டில் வெங்காயம் விவசாயிகளின் பணப்பயிராகக் கடந்த காலங்களில் காணப்பட்டது. தற்போதைய நாட்டுச் சூழலினால் வெங்காயச் செய்கையானது பாதிப்படைந்தபோதிலும் விவசாயிகள் தமது செய்கையைக் கைவிடாது தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றார்கள்.

வெங்காயச் செய்கை விஸ்தீரணம், விளைவு என்பன போக ரீதியாக வருமாறு:-

குடாநாட்டு மக்களின் நுகர்வுக்காக 480

| காலப்பகுதி | விஸ்தீரணம் (ஹெக்டேயர்) | விளைவு (மெற்றிக்தொன்) |
|---|---|---|
| 2005/2006 காலபோகம் | 1004 | 12641 |
| 2006 சிறுபோகம் | 795 | 9515 |
| 2006/2007 காலபோகம் | 758 | 10492 |
| 2007 சிறுபோகம் | 275 | 3591 |
| 2007/2008 காலபோகம் | 578 | 6936 |

மெ.தொன் வெங்காயம் ஒரு மாதத் திற்கு தேவை. இக் காலப்போகத்தில் 6936 மெ.தொன் வெங்காயம் உற்பத்தி செய்யப்படும் எனவும் இதில் 3656 மெ. தொன் மிதமிஞ்சியும் காணப்படும் எனவும் எதிர்வு கூறப்படுகிறது.

கடந்த வருட ஆரம்பத்திலிருந்து ஐப்பசி வரையான காலப்பகுதியில் வெங்காயத்தின் விலை 5 ரூபா - 20 ரூபா வரையில் காணப்பட்டது. எனினும் 2007சிறுபோகத்தில் வெங்காயச் செய்கை வீழ்ச்சியடைந்தமையினால் கார்த்திகை - மார்கழி காலப்பகுதியில் விலை 100 ரூபா வரை உயர்ந்து சென்றது. எனவே மீண்டும் ஒரு விலை வீழ்ச்சி ஏற்படாது தடுப்பதற்குரிய முற்பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

**வெங்காயத்தை பதப்படுத்தி விற்பனை செய்ய முடியுமா?**

வெங்காயத்தை பதப்படுத்தி பாவித்தல் தொடர்பான ஆய்வினை விவசாயத் திணைக்களம், விவசாய பீடத்தடன் இணைந்து மேற்கொண்டது. விவசாய பீடத்தின் இறுதியாண்டு மாணவன் யோ. பாலகுமாரன் இந்த ஆய்வை மேற் கொண்டிருந்தார். ஆய்விலிருந்து வெங்காயத்தை பதப்படுத்தி பயன்படுத்தலாம் எனக் கண்டறியப்பட்டது.

**வெங்காயத்தை பதப்படுத்துதல்**

வெங்காயத்தை சிறு துண்டுகளாக வெட்டுதல்

* சாதாரணமாக ஒரு கிலோ சுத்தமாக்கிய வெங்காயத்தை கையால் சிறு துண்டாக வெட்ட ஒரு வேலையாளிற்கு 30 நிமிடம் செலவாகின்றது.

* அதிகளவில் சுத்தமாக்கி வெட்டும் போது வேலையாள்கள் வெங்காயத்தின் புரோற்றோகற்சுயிக்கமிலம் என்னும் வேதிப் பொருளால் கண்ணீர், மூக்கு நீர் வடிதலினால் அசௌகரியத்திற்குள்ளாகின்றார்கள்.

* வேலையாள்களின் கூலிச் செலவை மீதப்படுத்தவும் அசௌகரியங்களைக் குறைக்கவும் வெங்காயத்தை சிறு துண்டுகளாக வெட்டும் இயந்திரம் அறிமுகப்படுத்தப்படு கின்றது.

இந்த இயந்திரத்தால் வெட்டும்போது வெங்காயம் சீராக வெட்டப்படுவதுடன் ஒரு கிலோ சுத்தமாக்கிய வெங்காயத்தை ஏழு நிமிடங்களில் வெட்ட முடி யும்.

**வெட்டப்பட்ட துண்டுகளை உலர்த்துதல்**

* ஒரு கிலோ வெகாயத்தை சுத்தமாக்கி வெட்டி உலர்த்தும் போது 180-200 கிராம் வரையான உலர்த்திய வெங்காயத்தைப் பெற முடியும்.

* வெங்காயத்தை உலர்த்தும் போது அதன் ஈரப்பதன் 10% இலும் குறைவாக வரும்வரை உலர்த்தவேண்டும். வெங்காயத்துண்டு உடையும் வரை காயவிடும் போது அதன் ஈரப்பதன் 10% இலும் குறைவாகக் காணப்படும்.

* வெங்காயத்தின் ஈரப்பதன் குறைவடையும் போது நுண்ணங்கிகளின் தொழிற்பாடு குறைவடைகின்றது. எனவே நீண்ட காலம் சேமிக்க முடியும்.

வெங்காயத்தை நேரடியாக சூரிய ஒளியில் உலர்த்துவதிலும் பார்க்க சூரிய உலர்த்தியை பயன்படுத்தி உலர்த்துவது சாலப் பொருத்தமாகும்

நேரடியாக ஒளியில் உலர்த்துவதிலும் பார்க்க சூரிய உலர்த்தியை உபயோகிப்பதால் உலர்த்தும்போது தரமான சுத்த மான

**சூரிய உலர்த்தியைப் பயன்படுத்துவதில் உள்ள அனுகூலங்கள்**

| நேரடி சூரியஒளி | சூரிய உலர்த்தி |
|---|---|
| * குறைந்தது 4 நாள்கள் உலர்த்த வேண்டும். | * 2 நாள்கள் உலர்த்த போதுமானது |
| * சீரற்ற முறையில் உலர்வடையும் | * சீரான முறையில் உலர்வடையும் |
| * தூசுக்கள் சேர்வதால் நிறம் கூடியளவு மாற்றமடையும். மண்ணிறமாக மாறும். | * நிறம் மாற்றமடைதல் குறைவு |
| * பறவைகள், விலங்குகளால் அசுத்த மடையும். | * அசுத்தமடைவதில் இருந்து பாதுகாக்கப்படும். |

பதப்படுத்திய வெங்காயத்தை பெற முடியும். சிறிய அளவிலான சூரிய உலர்த்தியொன்றில் நீள அகலம் 3 1/2 x 3 1/2 அடி ஆகும்

**பதப்படுத்திய வெங்காயத்தினை உபயோகிப்பதில் உள்ள அனுகூலங்கள்**

* பதப்படுத்தாத வெங்காயத் துடன் ஒப்பிடும்போது பதப்படுத்திய வெங்கா



வெங்காயத்தை சிறு துண்டுகளாக வெட்டும் இயந்திரம்

யத்தின் காரத்தன்மை, சுவை என்பவற்றில் ஒப்பிட்டுக் கூறக் கூடிய வித்தியாசத்தை உணர முடியும்.

* துரித உலகத்தில் வேலைக்குப்போகும் பெண்கள், உடனடி உணவு உற்பத்தியாளர்கள் மற்றும் ஏனைய உணவகங்களில் வெங்காயத்தை சுத்தமாக்கி வெட்ட வேண்டிய தேவையின்றி இதனைப் பாவிக்க முடியும்.

* இலகுவில் பொரித்து அல்லது அவித்து குறைந்த நேரத்தில் தரமான உணவைத் தயாரிக்கலாம்.

* கொண்டு செல்லல் சுலபம்.

* நீண்ட காலம் சேமிக்கலாம்.

* வெளி மாவட்டங்களுக்கு அனுப்பும் போது ஏற்படுகின்ற இழப்புகள் குறைக்கப்படும்.

**பதப்படுத்திய வெங்காயத்தினை உபயோகிப்பதிலுள்ள பிரதி அனுகூலம்**

* வெங்காயத்தின் இயற்கையான இளஞ் சிவப்பு நிறத்திலிருந்து சிறிது குறைவடைந்து காணப்படும்

**சேமிப்புக் காலம்**

* பதப்படுத்திய வெங்காயத்தை 6 மாதங்களுக்கு மேலாக சாதாரண பொதி செய்தல் மூலம் சேமிக்கலாம்.

* பொலிப் புரோப்பலீன் பொலித்தினில் காற்றின்றிய நிலையில் பொதி செய்வதால் ஒரு வருடத்துக்கு மேலாக சேமிக்கலாம்.

**உபயோகிக்கும் முறை**

பதப்படுத்திய வெங்காயத்தை 10 நிமிடங்கள் நீரில் ஊறவைத்து வடித்தெடுக்கவும். நீரில் ஊறவைத்து வடித்தெடுத்த வெங்காயத்திலிருந்து கறிவகைகள், பொரியல், வறை, சீனிச்சம்பல், வெங்காய வடகம் போன்ற உணவு வகைகள் தயாரிப்பதற்கு பயன்படுத்தலாம்.

**உற்பத்தி செலவு**

ஒரு கிலோ பதப்படுத்திய வெங்காயத்தைப் பெற ஐந்து கிலோ பதப்படுத்தாத வெங்காயமும் அதனை சிறுதுண்டுகளாக வெட்ட 21/2 மணித்தியாலங்களும் தேவை. எனவே ஒரு கிலோ பதப்படுத்திய வெங்காயத்தை உற்பத்தி செய்வதற்குரிய உற்பத்தி செலவு 175 ரூபாவாகும்.

* வெங்காயத்தை பதப்படுத்தி பயன்படுத்தும்போது சுவை, காரத் தன்மையில் மாற்றமின்றி பதப்படுத்தாத வெங்காயத்தைப் பயன்படுத்துவது போன்று உள்ளது. உலர்த்திய வெங்காயத்தை சமையலில் பயன்படுத்துவதனால் சுத்தப்படுத்தி வெட்ட எடுக்கும் நேரம், சமைக்கும் நேரம் என்பவை மீதப்படுத்தப்படும்.

**திருமதி.அ.சிறிரங்கன்**
**விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர்.**

* பதப்படுத்தாத வெங்காயமாக பொதிகளில்/பெட்டிகளில் வெளிமாவட்டங்களுக்கு கப்பலில் அனுப்பும் போது கூடிய கொள்ளளவை எடுப்பதால் கப்பல் கட்டணம் உயர்வாக காணப்படுகிறது. மற் றும் நீண்ட நாள்கள் செல்லுமாதலால் வெங்காயம் பழுதடைவதற்கு வாய்ப்புக்கள் அதிகமாகின்றன.

* ஆகவே குறைந்த கொள்ளவில் அதிகளவிலான பதப்படுத்திய வெங்காயத்தை பழுதடையாமல் கப்பலில் அனுப்புவதன் மூலம் இலாபத்தை பெற்றுக் கொள்ள முடியும். *

## எங்கள் பிரதேசத்தின் பணப்பயிரைப் பேண சகல தரப்பினரும் கைகொடுக்க வேண்டும்


## நன்றி நவில்கிறோம்

எமது பாடசாலையில் அதிபராகக் பணியாற்றி இறைபதம் அடைந்த எம் அன்பார்ந்த அதிபர் அருட்.சகோதரி இக்னேசியா சூசைப்பிள்ளை அவர்களின் இறுதி அஞ்சலி இரங்கல் திருப்பலியிலும் இரங்கற் கூட்டத்திலும் கலந்து கொண்டு துயர் பகிர்ந்து ஆத்ம சாந்திக்காகச் செபித்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

நன்றி

பாடசாலைச் சமூகம்.

யா/இளவாலைக் கன்னியர் மடம் ம.வி

(சி/551735)

## இதய பூர்வமான கண்ணீர் அஞ்சலிகள்



அருட்சகோதரி
இக்னேசியா
சூசைப்பிள்ளை
(B.A - Diploma in Education)
( SLPS - II)
(அதிபர், இளவாலை கன்னியர்மடம் மகாவித்தியாலயம்)
நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபரும் யா/இளவாலை கன்னியர்மடம் மகாவித்தியாலய அதிபருமான

அருட்சகோதரி இக்னேசியா சூசைப்பிள்ளை (திருக்குடும்பச்சபை) அவர்கள் இறைபதம் அடைந்த செய்தியினால், பெருந்துயர் அடைகின்றோம். அவரின் பிரிவினால் துயரடைந்திருக்கும் திருக்குடும்ப சபையினர், அவரது குடும்பத்தினர், பாடசாலைச் சமூகத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்ம இளைப்பாற்றிற்காக இறைவனைப் பிரார்த்தித்து எமது கண்ணீர் அஞ்சலிகளை காணிக்கையாக்குகின்றோம்.

முதலாம் வட்டாரம்,
நெடுந்தீவு. [71782]

இந்திராணி கணபதிப்பிள்ளை
குடும்பத்தினர்.


## சமய சந்நிதிகளில்

கோப்பாய்,மார்ச்7

கோப்பாய் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலய சங்காபிஷேகம் இன்று வெள்ளிக் கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. மாலை பூந்தண்டிகைத் திருவிழா நடைபெறும். (202-72)

* * *

பருத்தித்துறை மருதடி வைரவர் ஆலய அலங்கார உற்சவம் எதிர்வரும் திங்கட் கிழமை ஆம்பமாகவுள்ளது.

இம்மாதம் 23ஆம் திகதி நடைபெறவுள்ள வைரவர் மடையுடன் உற்சவம் பூர்த்திபெறும். (202-218)


**உயர் பட்டப்படிப்பு G.A.Q, B.A**
**யாழ்., பேராதனை**

ஆரம்பம்: 9.03.08 மு.ப 9.00
சனி, ஞாயிறு நடைபெறும்

திரு.ஐங்கரன்-தமிழ் (மு.ப 9.00)
செல்வி சியாமினி-இந்து நாகரிகம் (மு.ப 10.00)

பிரபல ஆசிரியர்-ஆங்கிலம் (மு.ப 11.00)
திரு. ஈஸ்வரன்-மெய்யியல் (பி.ப 12.00)
திரு. விஜயகுமார்-அரசியல் (பி.ப 1.00)

பிரபல ஆசிரியர்-பொருளியல் (பி.ப 2.00)

கிறிஸ்ரல் சென்ரர், நெல்லியடி.

**இறைச்சிக் கோழிகள் தேவை**

புறொயிலர் இறைச்சிக்கோழி தேவை. உயிருடன் 1Kg 400 ரூபாய்க்கு கொள்வனவு செய்யப்படும்.

A.குமார், மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. (71766)


## மரண அறிவித்தல்கள்

### இராசேந்திரம் கருணாகரர்

**(முகாமைத்துவ உதவியாளர், மாவட்ட செயலகம், வவுனியா)**



சுதுமலை தெற்கு, மானிப்பாயை பிறப்பிடமாகவும் தற்போது வவுனியா மாவட்ட செயலகத்தில் கடமையாற்றியவருமான இராசேந்திரம் கருணாகரர் (05.03.2008) புதன்கிழமை அதிகாலை அகால மரணமானார்.

அன்னார் இராசேந்திரம் - யோகேஸ்வரி தம்பதியரின் ஏகபுதல்வன் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.03.2008) வெள்ளிக்கிழமை வவுனியாவில் நடைபெறும்.

அன்னாரின் சுதுமலை இல்லத்தில் இன்று பி.ப.2மணிக்கு துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

எச்சாட்டி,
சுதுமலை தெற்கு,மானிப்பாய்.

தகவல்:
இ.இராசேந்திரம் (தந்தை)

(71784)

### திருமதி அந்தோனிமுத்து அக்கினேஸ் தவமணி



ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாக வும் புனித இசிதோர் ஆலயத்தைச் சேர்ந்தவருமான திருமதி அந்தோனிமுத்து அக்கினேஸ் தவமணி அவர்கள் நேற்று (06.03.2008) வியாழக்கிழமை கொழும் பில் காலமானார்.

அன்னாரின் அடக்கச் சடங்கு பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பங்குத்தந்தை,
புனித யுவானியார் ஆலயம்,
பெரியவிளான்,
இளவாலை.
077-5188703

தகவல்:
R.M.G. நேசநாயகம்
(தம்பி)

# வலிகாமத்தில் பலம் வாய்ந்த அணிகள் மோதும் வீரர்களின் போர் துடுப்பாட்டம் இன்று ஆரம்பம்

உதயன் அனுசரணை

யாழ்ப்பாணம், மார்ச் 7

**வலிகாமத்தில் பலம் வாய்ந்த அணிகளுக்கிடையிலான "வீரர்களின் போர்" துடுப்பாட்டம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இன்று கோலாகலமாக ஆரம்பமாகிறது. இப்போட்டித் தொடர் இரண்டு தினங்கள் தொடர்ந்து நடைபெறும்.**

"உதயன்" அனுசரணையுடன் இடம்பெறும் இத்துடுப்பாட்டத்தில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியும் மோதுகின்றன.

க.நிரோஜன் தலைமையிலான ஸ்கந்தா அணியும் ம.எல்மோ நிக்சன் தலைமையிலான மகாஜன அணியும் களம் இறங்குகின்றன.

இரு அணிகளும் இவ்வாண்டு பருவகாலத்தில் கலந்துகொண்ட ஆட்டங்களில் தங்கள் திறமைகளை வெளிக்காட்டியிருந்தன.

இதனால் இந்த ஆட்டம் பலமான அணிகள் மோதும் மோதலாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.


எட்டாவது ஆண்டாக இடம்பெறும் இந்த "வீரர்களின் போர்" ஆட்டம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் க.சிவாஜி, மகாஜனக் கல்லூரி அதிபர் திருமதி சி. அனந்தசயனன் ஆகியோரின் இணைத் தலைமையில் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

ஆட்ட ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையின் தலைவர் கலாநிதி அ.சக்திவேலும், கௌரவவிருந்தினராக வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக யாழ். "ரெலிக்கொம்"மின் பதவிநிலை உத்தியோகத்தர் ச.ஜனார்த்தனனும், துறைசார் விருந்தினராக வலிகாமம் வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராசாவும் கலந்து கொள்வர்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற ஆட்டங்களில் 2005 ஆம் ஆண்டு ஸ்கந்தா வெற்றி பெற்றது. ஏனைய ஆண்டுகளில் நடந்த ஆட்டங்கள் சமநிலையில் முடிவடைந்தன.

இம்முறை ஆட்டத்தில் இரு அணிகளும் பலமான நிலையில் இருப்பதால் வெற்றி, தோல்வி எந்த அணிக்கு என்பதை கணிக்க முடியாது என்று ரசிகர்கள் கூறுகின்றனர்.

(அ-1-86)



**ஸ்கந்தா அணி**

*அமர்ந்திருப்பவர்கள் (இ-வ):* பா.ராஜீவன் (பயிற்றுநர்), த.சிவகுமார் (பொறுப்பாசிரியர்), யோ.ரஜீ வன் (உபதலைவர்), க.சிவாஜி (கல்லூரி முதல்வர்), க.நிரோஜன் (அணித்தலைவர்), ஆறு.திரு முருகன் (பிரதி முதல்வர்), வ.நந்தீஸ்வரன் (விளையாட்டுத்துறை முதல்வர்), தா.இராசரத்தினம் (செயலர்), ச.யசிதரன் (உதவிப் பயிற்றுநர்).
*நிற்பவர்கள் (இ-வ):* அ.லதீஸ், கு.நிசாகரன், எ.ஜெலன்ஸ், சி.லோறன்ஸ், செ.விஜிதரன், க.பென் ஜோய், க.பிரகாஸ், இ.தஜீகன், ச.சேம்ராஜ், க.புருசோத்மன், தே.சசிகுமார், அ.சதீசன், ப.கௌதமன், க.விஸ்ணுப்பிரகாஸ்.



**மகாஜன அணி**

*அமர்ந்திருப்பவர்கள் (இ-வ):* க.மயில்வாகனம் (பொறுப்பாசிரியர்), இ.சிறிதரன் (பயிற்றுநர்), ம.எல்மோ நிக்சன் (அணித்தலைவர்), திருமதி சி.அனந்தசயனன் (கல்லூரி முதல்வர்), கு.மாதவன் (அணி உபதலைவர்), நா.புனிததயாபரன் (விளையாட்டுத்துறை முதல்வர்)
*நிற்பவர்கள் (இ-வ):* ப.தயாளன், ப.பார்த்தீபன், க.கபிலன், சி.டிலக்சன், ச.கோகிலன், அ.அருட்செல்வன், கோ.திலீபன், ம.கஜதீபன், ம.கோகுலதாஸ், தி.விஸ்ணுகாந், வி.கபில்தேவ்.

**போட்டி நடைபெறும் நேரங்கள்:**

- இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்ப நிகழ்வுகள்
- ஆட்டநேரம் இன்று முற்பகல் 10.00 - மாலை 4.30 மணி
- நாளை காலை 9.00 - பிற்பகல் 3.30 மணி

# பொன் அணிகளின் 91ஆவது துடுப்பாட்டம் இன்றும் நாளையும் சென்.பற்றிக்ஸில்!



**சென்.பற்றிக்ஸ் கல்லூரி**

*இருப்பவர்கள் (இ-வ):* சி.சகாயராஜா (விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர்), ம.யூ மனோச், அ.மரின் குமார் (தலைவர்), வண.பிதா எம்.ஜெறோ செல்வநாயகம் (அதிபர்), செ.நிசாந்தன் (பயிற்றுநர்), ஜே.றெக்னோ (உபதலைவர்), ப.ஜெக்குமார் (கிரிக்கெட் பொறுப்பாசிரியர்).
*நிற்பவர்கள் 1ஆவது வரிசை (இ-வ):* அ.ம.மனோச், ஞா.றகேல்சன், ம.சுஜித்திரன், ப.நவதீபன், ஜெ.தர்ஷன், பொ.மைக்கல், த.லவதீசன், கே.நிரோஜன், ப.லோகநாத்.
*நிற்பவர்கள் 2ஆவது வரிசை (இ-வ):* சி.மிலாண்டோ ஜெனிபர், ம.அ.நிலோசன், மா.வே.கமில்ரன், ய.பிரசன்னா, ஜோ.சதானந்தன்.



**யாழ்ப்பாணக் கல்லூரி**

*இருப்பவர்கள் (இ-வ):* பி.எல்.மோகனகுமார் (Physical Director), ஜே.செந்தூரன், வி.ஜோய் சிகான் (தலைவர்), நோயல், ஏ.விமலேந்திரன் (அதிபர்), எஸ்.நிறோசன் (உபதலைவர்), ஆர்.குகன் (பயிற்றுநர்)
*நிற்பவர்கள் (இ-வ):* Mas ரி.ஜெயநந்தகுமார், பிரசாத், துசியந்தன், நிகேதன், பிரசோபனன், சிறிகுகன், புருசோத், கோமலதரன்.

யாழ்ப்பாணம், மார்ச் 7

**பொன் அணிகள் மோதல் என வர்ணிக்கப்படும் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதும் 91ஆவது துடுப்பாட்டம் இன்றும் நாளையும் சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் ஆயர் தியோகுப்பிள்ளை விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.**

சென்.பற்றிக்ஸ் அணிக்கு அ.மரீன்குமாரும் யாழ்ப்பாணக் கல்லூரிக்கு வி. ஜோய் ஷிகானும் தலைமை வகிக்கிறார்கள்.

இவ்வருடம் நடைபெற்ற போட்டிகளில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி, யூனியன் கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி அணிகளை இன்னிங்ஸாலும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிகளை 3 விக்கெட்டுக்களாலும் வெற்றியீட்டியது. மகாஜனக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி அணிகளுடனான போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி இவ்வருடம் பங்குபற்றிய போட்டிகளில் மகாஜனக் கல்லூரி அணியை வெற்றி கொண்டும், யூனியன் கல்லூரி, ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணிகளுடன் வெற்றி தோல்வி இன்றியும், சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி அணிகளுடன் தோல்வியும் கண்டது.

1917ஆம் ஆண்டு தொடக்கம் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணக் கல்லூரி அணியினருக்கும் இடையில் இதுவரை காலமும் நடைபெற்ற பொன் அணிகள் மோதலில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 31 தடவைகளும், யாழ்ப்பாணக் கல்லூரி அணி 15 தடவைகளும் வெற்றி பெற்றுள்ளன. 24 தடவைகள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன. மிகுதி விவரம் கிடைக்கப்பெறவில்லை.

இம்முறை சென்.பற்றிக்ஸ் அணி துடுப்பாட்டத்தில் பலம் வாய்ந்தது எனவும் யாழ்ப்பாணக் கல்லூரி அணி பந்து வீச்சில் பலம் வாய்ந்தது எனவும் இரசிகர்கள் கருதுகின்றார்கள்.

1973ஆம் ஆண்டு பொன் அணிகள் மோதலில் வெற்றி கொண்ட யாழ்ப்பாணக் கல்லூரி அணி அதன் பின் நடைபெற்ற போட்டிகளில் 9 போட்டிகளில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியிடம் தோல்வியடைந்துள்ளது. கடந்த வருட பொன் அணிகள் மோதலில் வண.பிதா T.M.F.லோங் அடிகளார் ஞாபகார்த்த சுற்றுக் கேடயத்தை தனதாக்கிக் கொண்ட சென்.பற்றிக்ஸ் கல்லூரி இவ்வருடம் அதைத் தக்க வைத்துக் கொள்ளுமா அல்லது அதை யாழ்ப்பாணக் கல்லூரி அணி சுவீகரித்துக் பழி தீர்த்துக்கொள்ளுமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

**போட்டி நடைபெறும் நேரங்கள்:**

- இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்ப நிகழ்வுகள்
- ஆட்டநேரம் - 9 - 12, 12.40 - 2.40, 3 - 5.
- நாளையும் இதே நேரத்தில் ஆட்டங்கள் இடம்பெறும்.

# அன்னமிட்ட கை

### ஞானக்கதிர்

மனிதன் பலவிதம். அதில் ஒவ்வொருவரும் ஒருவிதம். அன்பு , பாசம் என்பவற்றால் கட்டுப்படுபவர்கள். சிறந்த மானுடராக வாழ்கின்றார்கள். பொய், களவு, பொறாமை உள்ளவர்கள் நிம்மதியற்ற வாழ்வில் சஞ்சரிக்கின்றார்கள்.

பொய்சொல்லாதே, பிச்சை எடுக்காதே, களவெடுக்காதே. இம்மூன்று தத்துவங்களும் மனிதன் கடைப்பிடிக்க வேண்டியவை. சகலரும் தம் நோக்கங்களுக்காக இறைவனிடம் மன்றாடுகின்றார்கள். இறைவனும், அவர்களுக்கு உதவியருளுகின்றார். இதனைத் தெய்வ நம்பிக்கை என்று கூறலாம். இதற்கு உதாரணமாகத் தெய்வீகக் கதையொன்று ஞாபகத்துக்கு வருகின்றது.

மதுரையில் திருடர் கூட்டம் அதிகம். இவர்கள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வீடாகச் சென்று கொள்ளையடித்து வந்தார்கள். மக்களும் பயத்தினால் இரவு வேளைகளில் வீட்டை விட்டு வெளியே வருவதில்லை. திருடர்கள் நள்ளிரவில் வீடு புகுந்து கொள்ளையடிப்பார்கள்.

அவ்வூரில் இறைபக்தி மிக்க பாட்டி ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு உற்றார், உறவினர் யாரும் கிடையாது. தனிமையில் பலகாரம் செய்து விற்றுப் பணம் சம்பாதித்து வந்தார். இந்நிலையில் கொள்ளை அடிக்கும் திருடர்களின் அடுத்தநிலை அந்தப் பாட்டியின் வீடு. அதைப் பாட்டியும் உணர்ந்தார். அந்தப்பாட்டி மாலை ஆனதும் சோறு, கறிசமைத்து பப்படம், வடகம் பொரித்து, மோர்க்குழம்பு வைத்து வாழையிலையும் வெட்டி வைத்துக் கொண்டு திருடர் வரும்வரை காத்திருந்தார்.

நள்ளிரவு 12 மணிக்கு திருடர் கோஷ்டி அட்டகாசத்துடன் பாட்டி வீட்டினுள் புகுந்தது. பாட்டி மனம் நோகாமல் அவர்களை வரவேற்று செம்பில் தண்ணீர் கொடுத்து 'தம்பிமாரே முதலில் கையைக் கழுவுங்கள் உங்களுக்காக அறுசுவை உணவு சமைத்திருக்கின்றேன். சாப்பிட்டு விட்டு என்பொருள்களை எடுத்துச் செல்லவும்' என்று கூறினார். திருடர்கள் கை அலம்பிவிட்டு வாழையிலை முன் அமர்ந்தார்கள். சோறு வைத்து பலவிதமான கறிவகைகள் இட்டு பப்படம், வடகம், மோர்க்குழம்புடன் சுவைத்து உண்டார்கள். திருடர்கள். மிதமிஞ்சிய அளவில் சாப்பிட்டபின் ஏப்பம் விட்டுக் கொண்டு எழுந்தார்கள்.

பாட்டி உடனே தன்வீட்டுக் கதவைத் திறந்து விட்டார். 'தம்பிமாரே! போய் உங்களுக்குத் தேவையானவற்றை எடுங்கள், என்று அன்பாகக் கூறினார். திருடர்கள் 'பாட்டி உங்கள் வீட்டில் திருடமாட்டோம்' என்றார்கள். பாட்டி 'தம்பிமாரே என்னைப் போலத்தான் மற்றவர்களும் கஷ்டப்பட்டுச் சம்பாதித்து வைத்தார்கள். நீங்கள் ஒவ்வோர் இரவும் ஒவ்வொரு வீடாகக் கொள்ளை அடித்து வருகிறீர்கள். [illegible] பசி தீர்த்ததனால் என் வீட்டைக் கொள்ளையடிக்கவில்லை. அதே போல் மற்றவர்களையும் மதிக்க வேண்டும் என்றார்.

திருடர்கள் ' பாட்டி, பாட்டி பசியின் கொடுமையால் திருடுத் தொழிலைச் செய்தோம். பசிதீர்ந்ததால் களவு எண்ணமே மாறிவிட்டது. இனிமேல் நேர்மையான வழியில் உழைத்து சீவிப்போம்' என்று கூறி விடைபெற்றனர்.

இந்தப் பாட்டியின் உபதேசத்தால் அடுத்த நாளிலிருந்து அவ்வூரில் கொள்ளையே நடக்கவில்லை.

இதை அறிந்த மக்கள் ''ஊரைக்காத்த பாட்டி'' என்று பாராட்டினார்கள்.

# மடிகின்ற விதையாகி பயன்தரு மரமாவோம்

சங்கத்திருவுரை நூல் கூறுவதுபோன்று ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு. அக்காலத்திற்கு ஏற்பவே ஒவ்வொரு நிகழ்ச்சிகளும் இம்மண்ணிலே நிகழ்ந்தேறுகின்றன. இந்நாள்களிலே நாம் அனைவரும் இறைமகன் கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பினை நம்வாழ்வோடு ஒப்பீடுசெய்து நமது வாழ்க்கையை மீளாய்வு செய்து வருகின்றோம்.




தவக்காலம் உண்மையில் எமக்கு உணர்த்தும் செய்தி என்ன? திருச்சபை ஏன் இந்நாள்களை விசேட விதமான காலமாக நமக்குத் தந்திருக்கின்றது. எனக்கும் இறைமகன் கிறிஸ்துவிற்கும் இடையே உள்ள உறவு என்ன? இறைமகன் கிறிஸ்து ஏன் எனக்காக/ எமக்காக மரிக்க வேண்டும்? இவ்வாறான கேள்விகளை நாம் இந்நாள்களில் அடிக்கடி கேட்டுக் கொள்ளவேண்டும். இக்கேள்விகளைக் கேட்பதோடு நின்றுவிடாது நான் எனக்குக் கொடுக்கப்பட்டுள்ள காலத்தைப் பயனுள்ள ஒன்றாக மாற்றி அமைக்க வேண்டும். ஏனெனில் நாம் விரயம் செய்யும் நேரத்தை நம்வாழ்வில் மீண்டும் பெற்றுக் கொள்ளல் என்பது இயலாத காரியமாகும்.

இன்றைய நாள் நற்செய்தியில் கூறப்படுவது போன்று காலம் வரும்வரை அவர்கள் காத்திருந்தார்கள். அதாவது, ''அவர்கள் இயேசுவைப் பிடிக்க முயன்றார்கள். எனினும் அவரது நேரம் இன்னும் வராததால் யாரும் அவரைத் தொடவில்லை.'' *(யோவான் 8:30)*

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் நேரம் இன்றியமையாத ஒன்றாகும். இதனால்தான் நேரம் பொன்னானது என்பார்கள். எமது பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையே உள்ள காலப்பகுதிதான் நமக்கு தரப்பட்டுள்ள நேரமாகும். இதனை நாம் எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில்தான் எமது எதிர்காலம் தங்கியுள்ளது. நமக்கு முன்னே வாழ்ந்து சென்ற பல அறிஞர்களும், பல மேதைகளும், ஏன் பல புனிதர்களும் நக்குத் தரும் பாடமும் இதுவே ஆகும். அவர்கள் தம் வாழ்நாளினைப் பயனுள்ளதாகப் பயன்படுத்தினார்கள். அதனால் மற்றவர்களுக்கு பயனுள்ளவர்களாகத் திகழ்கின்றார்கள்.

எனவே, வாழ்வில் தடையா? தளர்ந்துவிடாதே! சாவாலா? சோர்ந்து போகாதே; கொலை அச்சுறுத்தலா? குலைந்து போகாதே! ஏனெனில் இவைகள் மூலம்தான் நமது உறுதி உரமிடப்படுகின்றது. நமது வாழ்வின் திறன்கள் வரையறுக்கப்படுகின்றன. இறைமகன் கிறிஸ்துவும் இவைகள் அனைத்தையும் தன் வாழ்வில் சந்தித்தார், சிந்தித்தார். அதனால் தரணிவாழ தன்னையே நமக்காய்த் தந்திட்டார். மடிகின்ற விதையாக இருப்போம். அப்போதுதான் மற்றவர்கள் பயன்பெற முளைக்கின்ற மரமாக முடியும். மழுங்கிய வித்தானால் பிறர் கரங்களில் அடிபட்டு, காற்றினில் அடித்துச் செல்லப்பட்டு பிறர்க்கும் எமக்கும் பிரியோசனமின்றி மிதிபடநேரிடும். எனவே, சிந்திப்போம் செயற்படுவோம்.

அ.வசந்தன் *(அ.ம.தி.)*

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசையா அன்னலட்சுமி



கோண்டாவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதிஇராசையா அன்னலட்சுமி 02.03.2008 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் மகளும் சுதுமலை வடக்கு சுப்பையா இராசையாவின் அன்புத் துணைவியும் லலிதாதேவி, தயாநிதி, முருகானந்தன், சிவானந்தன், ஜெயாநிதி ஆகியோரின் பாசமிகு தாயும் சிவகுமார், சந்திர மௌலீசன், கிருஷான், சிவாணி, யோகநாயகி ஆகியோரின் மாமியும் தீபனா, தர்ஷனா, சாரங்கன், சிவமைந்தன், கௌரிபாலன், மிசலா, மிசனா, யுவன், ஆதிரியன் ஆகியோரின் பேர்த்தியும் நேசமலர், ஞானமலர், பரமசிவம், சிவராஜலிங்கம், பரமேஸ்வரி, சிவயோகராணி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.03.2008 திங்கட்கிழமை றேமன் மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கொழும்பு. (71765)

## சுப்பிரமணியம் நடராசா

(ஓய்வுபெற்ற ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர், எயிற்லைன், யாழ்ப்பாணம்)



மூளாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் நடராசா 05.03.2008 புதன்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம்-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாலிங்கம்-விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், தனலட்சுமியின் பாசமிகு கணவரும், ரவீந்திரன் (கனடா), ரவிச்சந்திரன் (கனடா), ரவிகாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயலட்சுமி, சந்திரலீலா, தசாரூபவதியின் பாசமிகு மாமனாரும், மஞ்சுபாஜினி, ரவிவர்மன், கஜன், மயூரன், நிசாந்தினி, லக்ஸ்மன், புருஷோத்தமன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், கந்தையா, செல்லம்மாவின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்.

தகவல்:
திருமதி ந.தனலட்சுமி *(மனைவி)*.

மூளாய். (71764)

# புலிகள் கிழக்கிலிருந்து பின்வாங்கிய வேளையில் அவர்களின் ஆயுதங்கள் தெற்குக்கு கைமாறினவா?

## தென்னிலங்கைக் குழு ஒன்று தொடர்பாகப் புலனாய்வாளர்கள் துருவுகின்றனர்

கொழும்பு, மார்ச் 7

கிழக்கில் இருந்து விடுதலைப் புலிகள் பின்வாங்கிய சமயம், அங்கு அவர்கள் வைத்திருந்த ஆயுதங்களில் ஒரு தொகுதி தென்னிலங்கையில் செயற்படும் ஒரு குழுவுக்கு கைமாறியதா என்பது குறித்து அரச புலனாய்வுப் பிரிவு துருவத் தொடங்கியிருப்பதாகச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

கிழக்கின் அரசியல்வாதி ஒருவர் ஊடாகவே இந்த ஆயுதங்கள் சம்பந்தப்பட்ட குழுவுக்குக் கைமாறியதாகக் கிடைத்திருக்கும் இரகசியத் தகவலைத் தொடர்ந்தே, இது விடயத்தில் புலனாய்வாளர்கள் நுணுக்கமாக இறங்கியிருக்கின்றனர் என சிங்கள இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய நபர்களைக் கண்டறிவதற்காக பொலிஸாரும், இராணுவத்தினரும் அண்மையில் மஹரகம பிரதேசத்தில் தேடுதல் நடத்திய சமயம், மேற்படி குழுவினரால் நடத்தப்படும் அரசியல் அலுவலகம் ஒன்றையும் சோதனையிட முயன்றனர் என்றும் -அரசியல் அதிகாரத் தொடர்புகள் மூலம் அந்த சோதனை நடவடிக்கை தடுக்கப்பட்டது என்றும் - கூறப்படுகின்றது.

அதன் பின்னர் 'டபிள் கப்' ரகத்தை ஒட் டிய சில வாகனங்கள் மூலம் அந்த அலுவகத்திலிருந்த பல பொருள்கள் ஒளிவு மறைவாக அகற்றப்பட் டன என்றும் அந்த இணையத்தளச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி குழுவுக்கு தம்புள்ளப் பகுதியில் ஆயுதப் பயிற்சி முகாம் ஒன்று இருப்பதாகவும் புலனாய்வுப் பிரிவினருக்குத் தகவல் கிடைத்துள்ளதாம்.

கடந்த சில தினங்களில் தென்னிலங்கையில் பல இடங்களில் மின் மாற்றிகளைத் தகர்ப்பது போன்ற பொதுச் சொத்துக்களை நாசப்படுத்தும் வேலையில் இந்தக் குழுதான் ஈடுபட்டதா என்பதையும் புலனாய்வுப் பிரிவினர் துருவி வருகின்றனர்.

இத்தகைய சம்பவங்களின் பின்னணியில் புலிகள் அல்லாத மூன்றாம் தரப்பு ஒன்று சம் பந்தப்பட்டிருக்கலாம் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே நாட்டு மக்களுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி குழுவினர் படைச் சிப்பாய் களுடன் ஏதேனும் வகையில் நெருங்கிய தொடர்பாடல்களைக் கொண்டிருக்கின்றார்களா என்பதனைக் கண்டறிவதிலும் புலனாய்வுப் பிரிவினர் சிரத்தை காட்டி வருகின்றனர். - இந்தச் சாரப்பட அந்த இணையத்தளச் செய்தி மேலும் தகவல் வெளியிட்டது. (சி)

# விழிநீர் சொரியும் அஞ்சலிகள்!

அமைதியே உருவான அன்பு நண்பா!
காலன் உனக்கு குண்டு வடிவில் வந்தானோ?
அரச பணிக்கேன்று வவுனியா போனாய்!
இறுதியில் உன்முகம் காணா நிலைக்காளானோமே நண்பா!.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில்
எமது பள்ளித் தோழனும் வவுனியா மாவட்டச் செயலக
அரச பணியாளருமான எமது நண்பன்

## இராசேந்திரம் கருணாகரர்

இன் அகால மரணத்தால் அதிர்ச்சியுறுகிறோம்.
தமது ஏக மகனை இழந்து தவிக்கும் பெற்றோருடனும்
எமது ஆழ்ந்த துயரைப் பகிர்ந்து நிற்கின்றோம்.

2001 க.பொ.த (உ/த) உயிரியல் பிரிவு மாணவர்கள்,
யாழ்.இந்துக் கல்லூரி. (71765)

# பெயர் மாற்றம்

87/03, கூமாங்குள வீதி, உக்கிளாங்குளம், வவுனியா எனும் முகவரியில் வசித்து வரும் ஐயாத்துரை பரமசிவம் ஆகிய நான் எனது பெயரை ஐயாத்துரை பிரகாஷ்ராஜ் என மாற்றம் செய்துள்ளேன் என்பதனை சகலருக்கும் இத்தால் மூலம் அறியத்தருகின்றேன்.

*வவுனியா.* (71768) ஐயாத்துரை பிரகாஷ்ராஜ்.

# அருணாசல அன்னையின் இதய பூர்வமான அஞ்சலி

எமது பாடசாலையின்
முன்னாள் ஆங்கில ஆசிரியர்

## சண்முகம் தர்மதாசன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/அருணாசலம் வித்தி., அளவெட்டி.

(அ/551729)

# தவறிவிட்டது

குணானந்தம் குணதீஸ்வரன் என்பவருடைய தே.அ.அ.இல. (782543490V). விசேட அடையாள அட்டை ஆகிய இரண்டும் 28.02.2008 யாழ்ப்பாணத்திலிருந்து கோண்டாவில் வரும் வழியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சென்.செபஸ்தியார் வீதி, கோண்டாவில் வடக்கு என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்

# கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.

- ✱ றாஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை
- ✱ மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
- ✱ திருமகள் களஞ்சியம் - சிவலிங்கப் புளியடி
- ✱ P.ரவி - தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி
- ✱ சிற்றி பாம் றேடேர்ஸ் - கல்வியங்காடு.

(71767)

## கே.ஸி.ஸி.ஸி கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 7

கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தால் கே.ஸி.ஸி.ஸி. வெற்றிக்கிண்ணத்துக்காக வருடா வருடம் நடத்தப்பட்டுவரும் மட்டுப்படுத்தப்பட்ட - 30 ஓவர்கள் கொண்ட - கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர்வரும் 20ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கின்றது.

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட அனைத்துக் கழகங்களும் இச்சுற்றுப் போட்டியில் பங்குபற்ற முடியும் என்றும்-பங்குபற்ற விரும்பும் கழகங்கள் எதிர்வரும்12 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கும் படியும்- நிலையச் செயலாளர் கேட்டுள்ளார்.

அணி ஒழுங்குத் தெரிவு எதிர்வரும் 16 ஆம் திகதி இடம்பெறும். (1)

## தாச்சிப் போட்டி

வலி.வடக்கு, மார்ச் 7

யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் உடுவில் வைகறை விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலான தாச்சிப்போட்டியில் இன்று பி.ப. 4 மணிக்கு வைகறை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மயிலிட்டி இளைஞர் ஒன்றிய விளையாட்டுக் கழகமும் அளவெட்டி பாரதி விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன.

## கோப்பாய் மென்பந்தாட்டத்தில் அச்சுவேலி சென்றல் சம்பியனானது

அச்சுவேலி, மார்ச் 7

கோப்பாய் கல்விக் கோட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் 19 வயதுப் பிரிவில் அச்சுவேலி மத்திய கல்லூரி சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் அச்சுவேலி மத்திய கல்லூரியும் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய அச்சுவேலி மத்திய கல்லூரி அணி 15 பந்துப் பரிமாற்றத்தில் 88 ஓட்டங்களுடன் 9 விக்கட்டுக்களை இழந்தது.

89 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி 8.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 41 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.

அச்சுவேலி மத்திய கல்லூரி அணி 47 ஓட்டங்களால் வெற்றிபெற்று கோப்பாய் கோட்ட சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது. (1-11)

## கிண்ணத்தைக் கைப்பற்றியது பமிலியன்ஸ்

வலி.வடக்கு, மார்ச் 7

யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

குருநகர் சென்.றோக் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழகமும் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன. ஆரம்பத்தில் இரு அணிகளும் மிகவும் விறுவிறுப்பாக விளையாடிய போதிலும் முதல்பாதி ஆட்டங்கள் நிறைவு பெற்ற போது பமிலியன்ஸ் விளையாட்டுக் கழகம் முன்னிலையில் நின்றது.

இரண்டாம் பாதி ஆட்டம் தொடங்கியதும் இரு அணிகளும் மிகவும் விறுவிறுப்பாகப் போட்டியில் மோதிக்கொண்டன.

ஆட்ட முடிவில் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழகம் 19:11 புள்ளிகள் அடிப்படையில் பாடும் மீன் விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டு பிரதேச செயலக சம்பியனானது. (1-86)

## வலைப்பந்தாட்டத்தில் கொக்குவில் இந்து வெற்றி

வலி.வடக்கு, மார்ச் 7

நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற வலைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 17 வயதுப் பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டியில் இரு அணிகளும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் இல்லை யென்ற நிலையில் மிகவும் சுறுசுறுப்பாக விளையாடினர்.

போட்டி முடிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி 09:06 புள்ளிகள் என்ற அடிப்படையில் யாழ்ப்பாண இந்து மகளிர் கல்லூரியை வெற்றி கொண்டு நல்லூர் வலய சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது. (1-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

### சதுரங்க செயலமர்வு

உடுவில், தெல்லிப்பழை கோட்ட பாடசாலைகளின் மாணவர்கள், ஆசிரியர்களுக்கான சதுரங்கப் போட்டிச் செயலமர்வு இன்றும், நாளையும், மறுதினமும் மருதனார்மடம் இராமநாதன் கலலூரியில் நடைபெறவுள்ளது.

## மெய்வன்மைப் போட்டிகள்

வலி.தென்மேற்கு, மார்ச் 7

அராலி முருகமூர்த்தி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு வித்தியாலய அதிபர் ஜெ.தர்மராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக சங்கானை கல்விக் கோட்டப் பணிப்பாளர் துரை எங்கரசு கலந்து கொள்வார். (1-135)

* * *

கோப்பாய், மார்ச் 7

கோப்பாய் தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு பாடசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் வி.என்.சித்திரவடிவேல் கலந்து கொள்வார். (1-72)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 7

புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய உப அதிபர் திருமதி ம.கணேசன் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வேலணைக் கோட்டக் கல்வி அதிகாரி கு.சரவணபவானந்தன் கலந்து கொள்வார். (1)

* * *

அச்சுவேலி, மாாச 7

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை சனிக்கிழமை வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் எஸ்.மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெறும் போட்டிகளில் கோப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி வி.என்.சித்திரவடிவேல் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (1-11)

## இலங்கை இராணுவத்தின் கெடுபிடி தொடர்வதால் கச்சதீவை தமிழக அரசு மீட்டுத் தரவேண்டும்

### பா.ஜ.க. மாநில துணைத் தலைவர் வலியுறுத்து

சென்னை, மார்ச் 7

தமிழக மீனவர்கள் மீதான இலங்கை இராணுவத்தினரின் கெடுபிடிகள் தொடர்ந்து வருவதால் கச்சத்தீவை மீட்கவேண்டும் - என்று பா.ஜ.க. மாநில துணைத் தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான பொன்.ராதாகிருஷ்ணன் வலியுறுத்தினார்.

மதுரையில் கடந்த செவ்வாய்க்கிழமை அவர் அளித்த பேட்டியில்மேலும் தெரிவித்ததாவது:-

''தமிழக மீனவர்களை இலங்கை இராணுவத்தினர் கைது செய்வது தொடர் நடவடிக்கையாகவுள்ளது. மீனவர்களைப் பாதுகாக்க தமிழக அரசும் மத்திய அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டும். உடன்பாடு மீறப்படுவதாலும், மீனவர்கள் பிரச்சினையாலும் கச்சத்தீவு மீட்கப்பட வேண்டியது அவசியமாகவுள்ளது. பா.ஜ.க. ஆட்சியின் போது இதுபோன்ற சூழல் இல்லை. தமிழகத்திலிருந்து இலங்கைக்கு ஆயுதக் கடத்தல் தொடர்கிறது.

மலேஷியாவில் தமிழர்கள் துன்புறுத்தப் படுகின்றனர். வேலை வாய்ப்பு உள்ளிட்ட அவர்களது உரிமைகள் பறிக்கப்படுகின்றன.

எனவே, தமிழர் நலனில் அக்கறை காட்டுவதாகக் கூறும் தி.மு.க. அரசு இதைக் கண்டித்து குரல் எழுப்ப வேண்டும். மும்பையிலும் தமிழர்கள் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

''கடந்த அ.தி.மு.க. ஆட்சியின்போது இலங்கைக்கு ஆயுதக் கடத்தல் நடந்ததாகக் கூறப்படுவது ஏற்புடையதல்ல. அப்போது ஆயுதக் கடத்தல் சம்பவம் நடைபெறவில்லை.

இராமர் பாலம் பிரச்சினை மீண்டும் எழுந்துள்ளது. விஸ்வ ஹிந்து பரிஷத்தின் வாகனப் பேரணி உள்ளிட்ட போராட்டத்துக்கு கட்சியினர் ஆதரவாக இருப்பர் - என்றார் பொன். ராதாகிருஷ்ணன்.

## மூன்றிலொரு பங்கு தமிழர்கள் ஈழத்திலிருந்து புலம்பெயர்வு

### யாழ்ப்பாணத்துக் கவிஞர் சேரன் கவலை

திருநெல்வேலி, மார்ச் 7

இலங்கையில் இருந்து மூன்றில் ஒரு பங்கு தமிழர்கள் புலம் பெயர்ந்துவிட்டனர் என யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ்க் கவிஞரும் கனடா நாட்டு 'வின்ஸர்' பல்கலைக்கழகப் பேராசிரியருமான சேரன் கவலை தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை சார்பில் 'எட்டுத்திக்கும் எம் தமிழர்' என்ற தலைப்பில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சொற்பொழிவு நிகழ்ச்சியில் சேரன் மேலும் பேசியதாவது:-

யாழ்ப்பாணத்திலிருந்து 1987ஆம் ஆண்டு நான் புலம்பெயர்ந்தேன். அப்போது இலங்கை - இந்திய அரசுகளுக்கு இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் காரணமாக, அங்கு நிறைய துயர சம்பவங்கள் நடந்தேறின. புலம்பெயர்வு என்பது தமிழர்களின் வாழ்வில் பிரிக்க முடியாத ஒன்றாகிவிட்டது.

''1948ஆம் ஆண்டுக்குப் பிறகு இலங்கையில் தமிழர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டன; அடக்குமுறை கையாளப்பட்டது. மெல்ல மெல்ல தமிழர்களை இலங்கை அரசு கொடுமைப்படுத்தத் தொடங்கியது. 1983இல் இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டனர். இந்த இனப்படுகொலைக்குப் பின்னர் தமிழர்கள் லட்சக்கணக்கில் அங்கிருந்து புலம் பெயரத் தொடங்கினர். இவ்வாறு 9 லட்சம் தமிழர்கள் உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளுக்குப் புலம் பெயர்ந்தனர். இது இலங்கையில் வசிக்கும் தமிழர்களில் மூன்றில் ஒரு பங்காகும்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் தங்களுக்கான புகலிடத்தைத் தேடுவதற்கு 3 ஆண்டுகள் கூட ஆனது. இந்தக் காலகட்டத்தில் அவர்கள் கற்பனையில்கூட நினைத்துப் பார்க்க முடியாத துன்பங்களை அனுபவித்தனர். ஆனால், தமிழகத்தின் சில ஊடகங்கள், புலம்பெயர்ந்த தமிழர்கள் அனைவரும் மிகவும் நன்றாக இருப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தி வருகின்றன. ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது அகதிகளாகச் சென்ற தமிழர்கள் மிகுந்த நெருக்கடியான நிலையிலேயே உள்ளனர்'' - என்றார் சேரன்.

## ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுக்க அஞ்சேன்!

### டி.ராஜேந்தர் ஆவேசம்

சென்னை,மார்ச் 7

எத்தனை தடைகள் வந்தாலும் - எத்தனை கட்டுப்பாடுகள் விதித்தாலும் ஈழத் தமிழர்கள் இன்னல்களில் இருந்து விடுபட்டு



சுபீட்சமான வாழ்வைப் பெற இறுதிவரை குரல் கொடுக்கத்தயங்க மாட்டேன் என்று இலட்சிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் டி. ராஜேந்தர் ஆவேச உரையாற்றியுள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலை சந்திப்பதற்காக இலட்சிய திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் 'இலட்சியமே கீதம்' என்ற தலைப்பில் 9 கொள்கை விளக்க பாடல்களை விஜய டி.ராஜேந்தர் தயாரித்துள்ளார். இந்தப் பாடல்கள் அடங்கிய குறுந்தகடு வெளியீட்டு விழா சென்னை சர். பி.டி. தியாகராயர் அரங்கில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

விழாவிற்கு இலட்சிய திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் விஜய டி.ராஜேந்தர் தலைமையேற்று பேசும் போது கூறியவை வருமாறு:-

கட்சி ஆரம்பித்த உடனே முதலமைச்சர் ஆகிவிட வேண்டும் என்று சிலர் கனவு காண்கின்றனர். தமிழ்நாட்டிற்கு எத்தனை முதலமைச்சர்கள் தான் வரமுடியும். வீட்டில் ஒரு மொழியும், வெளியே வந்ததும் ஒரு மொழியும் பேசுபவர்கள் எல்லாம் முதலமைச்சர் ஆகி விடலாம் என்று நினைக்கின்றனர்.

எனக்கு எல்லா மொழியும் தெரியும். மற்ற மொழிகளை நான் மதிக்கிறேன். தமிழ் மொழியை துதிப்பேன். இலங்கை இராணுவத்திற்கு மத்திய அரசு உதவி செய்கிறது. இதைப் பார்த்துக்கொண்டு தமிழர்கள் சும்மா இருக்க முடியுமா? இலங்கையில் இறப்பது தமிழர்கள். இதற்காக நாம் அழக்கூட முடியாதா?

நான் ஏன் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கக் கூடாது. நமது கட்சி மிகப் பெரிய சக்திமிக்க கட்சியாகும். நம்மை யார் கூட்டணி சேர்க்கிறார்களே அவர்கள் தான் வெற்றி பெற்று முதலமைச்சராக வர முடியும்.

அவருடன் கூட்டணி சேரப் போகிறோம். இவருடன் கூட்டணி சேரப் போகிறோம் என்ற பேச்சுக்கு இடமில்லை. நம்முடன் யார் வருகிறார்களோ? அவர்களுடன் கூட்டணி வைத்துக்கொள்வோம்'' - இவ்வாறு விஜய டி.ராஜேந்தரர் பேசினார்.

## சேது சமுத்திரத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடாளுமன்று நோக்கி விஸ்வ ஹிந்து பரிஷத் பேரணி

புதுடில்லி, மார்ச் 7

சேது சமுத்திரத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து விஸ்வ ஹிந்து பரிஷத் அமைப்பினர், நாடாளுமன்றம் நோக்கி கடந்த செவ்வாய்க்கிழமை பேரணி ஒன்றை நடத்தினர்.

மத்திய அரசு, கடந்த வாரம் சேது சமுத்திரத்திட்டம் தொடர்பாக உச்சநீதிமன்றில் புதிய பிரமாணப் பத்திரத்தைத் தாக்கல் செய்தது. அதில், 'சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தைத் தொடர்ந்து நிறைவேற்றுவதற்கு அனுமதிக்கும்படியும், ராமர் பாலம் பற்றி உச்சநீதிமன்றம் முடிவு எடுக்கும்படியும்' கேட்டுக்கொண்டிருக்கின்றது.

இதற்கு விஸ்வ ஹிந்து பரிஷத் உள்ளிட்ட இந்து அமைப்புகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தன. மேலும் நாடு முழுவதும் தொடர் போராட்டம் நடத்தப்படும் என்று விஸ்வ ஹிந்து பரிஷத் தலைவர் பிரவீன் தொகாடியா அறிவித்திருந்தார்.

இந்தநிலையில், திட்டமிட்டபடி தங்களது நாடு தழுவிய போராட்டத்தை விஸ்வ ஹிந்து பரிஷத் அமைப்பினர் கடந்த செவ்வாய்க்கிழமை தொடங்கினர். தலைநகர் புதுடில்லியில் நடத்தப்பட்ட போராட்டத்திற்குப் பாரதீய ஜனதா கட்சி ஏற்பாடு செய்திருந்தது.

ஆனால், பொலிஸார் அவர்களை நாடாளுமன்றக் கட்டடத்திற்குச் செல்ல அனுமதிக்கவில்லை. தடுத்து நிறுத்தி ராஜ்காட் பகுதியை நோக்கி திரும்பி விட்டார்கள். பின்னர் அங்கு பேரணி முடித்துவைக்கப்பட்டது.

# ‘தேசத்தின் குரலின்’ இருநூல்களுக்கு கிளிநொச்சியில் சிறப்பு அறிமுகவிழா

கிளிநொச்சி, மார்ச்7

விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் ‘தேசத்தின் குரல்’ அன்ரன் பாலசிங்கத்தின் ‘இரு இந்தியத் தலைவர்களும் விடுதலைப் புலிகளும்’, ‘விடுதலை’ ஆகிய இரண்டு நூல்களின் அறிமுக விழா கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

பொதுச் சுடரினை தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் ஏற்றினார்.

தலைமையுரையை விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவுப் பொறுப்பாளர் சு.ரவியும், நூல்களிற்கான அறிமுக உரையை ‘சுதந்திரப் பறவைகள்’ஏட்டின்ஆசிரியர்தமிழவேளும்சிறப்புரையை தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் பா.நடேசனும், கருத்துரையை கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரையும் நிகழ்த்தினர்.

நூலின் முதற்பிரதிகளை தமிழீழ நிதிப்பொறுப்பாளர் செ.வ. தமிழேந்தி வழங்க, வைத்தியர் திருமதி எழுமதி கரிகாலன் மற்றும் மூத்த படைப்பாளி வளவை வளவன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

இந்த நிகழ்வில் படைப்பாளிகள் மற்றும் விடுதலைப் புலிகளின் துறைசார்ப் பொறுப்பாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (சி)

## வலிகாமம் வலயத்தில் அதிபர் பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணம்,மார்ச்7

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்தவர்களிடம் இருந்தும் இலங்கை அதிபர் சேவை வகுப்பு-I (பட்டதாரி), வகுப்பு 2,I (பட்டதாரி), இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு-I (பட்டதாரி), வகுப்பு 2,I (பயிற்றப்பட்ட பட்டதாரி) ஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேலதிக விவரங்களை வலயக் கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு எதிர் வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.(202)

## வைத்தியர்களுக்கு சம்பளக் கொடுப்பனவு

கொழும்பு,மார்ச்7

யாழ்ப்பாணம் உள்ளிட்ட வட பகுதி வைத்தியசாலைகளில் கடமைக்கு சமுகம் அளித்த வைத்தியர்களுக்கு அவர்கள் கொழும்பில் தங்கியிருந்த காலத்திற்கும் சம்பளக் கொடுப்பனவை வழங்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா இதற்கான பணிப்புரையை வழங்கியுள்ளார்.

வடமாகாணத்தில் சேவையாற்றிய வைத்தியர்கள் இங்குள்ள வைத்தியசாலைகளில் சேவையாற்றுவதில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக கொழும்புக்கு சென்றார்கள். எனினும் அண்மையில் நடைபெற்ற பேச்சுக்களை அடுத்து அவர்கள் மீண்டும் வடபகுதி வைத்தியசாலைகளுக்கு வந்துள்ளார்கள். இவர்களுக்கு 3 மாதத்துக்கு ஒரு முறை இலவச விமான சீட்டுகளும் உணவு மற்றும் தங்குமிட வசதிகளும் வழங்கப்படவுள்ளன. (அ-2)

## ‘மத்திய வணிகம்’ வெளியீடும் வர்த்தக தின நிகழ்வும்

யாழ்ப்பாணம்,மார்ச்7

யாழ்.மத்திய கல்லூரி வர்த்தக மாணவர் மன்றத்தினர் நடத்தும் வர்த்தக நிகழ்வும் ‘மத்திய வணிகம்-6’ இதழ் வெளியீடும் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

செல்வன் செ. நிஷாந் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முகாமைக் கற்கைகள் வணிக பீடப் பீடாதிபதி க.தேவராஜா கலந்து கொள்வார். (202)

## றோட்டறக் கழகம் படுக்கை விரிப்புகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச்7

யாழ்ப்பாணம் றோட்டறக் கழகத்தினர் சாவகச்சேரி மாவட்ட மருத்துவமனைக்கு 30 படுக்கை விரிப்புகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

கடந்த புதன் கிழமை கழக உறுப்பினர்கள் மருத்துவமனைக்கு நேரடியாகச் சென்று நிர்வாகத்தினரிடம் இந்தப் படுக்கை விரிப்புகளைக் கையளித்தனர். (202-207)


**IIS இன் கணணிக்கற்கைநெறிகள்**
**புதிய பிரிவுகள் ஆரம்பம்.**

பிரிவு 1: 08/03/2008
பிரிவு 2: 14/03/2008
பகல் 10.00மணி

**Courses**

1.Diploma in Microsoft Office
2.Diploma in Desktop Publishing
3.Diploma in InterNet Technology
4.Diploma in Hardware Technology
5.Diploma in Eng.Drawing & AutoCAD
6.Diploma in Computerized Accounting

“IIS உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி”







**INSTITUTE OF INFORMATICS STUDIES**
#100,CLOCK TOWER ROAD,
JAFFNA
T.P.No:021 222 2831



உ
சிவமயம்

**சிவாச்சார்யாபிஷேக அழைப்பு**

அன்புடையீர்!

*திருவருள்மிகு அராலி அகாயக்குளம் விநாயகர் துணை நிற்க*

**ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் சர்வமங்கள சர்வசித்து வருஷம் மாசி மாதம் 26ஆம் நாள் (09.03.2008) ஞாயிற்றுக்கிழமை உத்தரட்டாதி நக்ஷசத்திரமும், துதியை திதியும், அமிர்தயோகமும் கூடிய காலை 10.20 மணிமுதல் 11.20 மணிவரையுள்ள இடப லக்கின சுபமுகூர்த்தத்தில்**

**தியாகராஜக்குருக்கள் சர்வேஸ்வர சர்மா** அவர்களுக்கு

**அகாயக்குளம் விநாயகர் தேவஸ்தான மண்டபத்தில் விஷேட தீட்சை, நிர்வாண தீட்சை, ஆசார்யாபிஷேகம் நடைபெறத் திருவருள் கைகூடியிருப்பதால் தாங்கள் தங்கள் பந்துமித்திர குடும்பசமேதராக வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.**

*தீட்சா குரு*
**சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள்**
(காயத்திரி பீடம், இணுவில்).

தங்கள் நல்வரவை நாடும்:
திரு .திருமதி சர்வேஸ்வர சர்மா ஜெயகௌரி தம்பதியரும்
திருவருள்மிகு அராலி அகாயக்குளம் விநாயகர் தேவஸ்தனமும்
திருவருள்மிகு அராலி மத்தி தறணன் முருகமூர்த்தி தேவஸ்தானமும்
திருவருள்மிகு அராலி ஆவரம்பிட்டி முத்துமாரி அம்பாள் தேவஸ்தானமும்.

**அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.**

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

(71752)



**யாழ்ப்பாணம் மாநகர சபை**
**பொதுசன நூலகம்**
**பழைய சஞ்சிகைகள் ஏலவிற்பனை**

*யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்திலிருக்கும் பழைய சஞ்சிகைகள், வாசகர்கள் பயன்படுத்தக்கூடிய வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டு,* **மார்ச் மாதம் 15ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு** *மாநகரசபை வளாகத்தில் அமைந்துள்ள* **நல்லூர் கிளை நூலகத்தில்** *வைத்து ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.*

*ஏலத்தில் கொள்வனவு செய்வோர் உடனடியாக பணத்தைச் செலுத்தி சஞ்சிகைகளை அப்புறப்படுத்தல் வேண்டும்.*

*சஞ்சிகைகளை பிரதான நூலகத்தில் பார்வையிடலாம்.*

**மு.செ.சரவணபவ**
**மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.**

(சி/551726)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை சக ஆசிரியை செல்வி
**மணிமேகலை செல்லையா**
அவர்களின் அன்புத் தாய்
**திருமதி செல்லையா சின்னம்மா**
அவர்களின் பிரிவுத் துயரினால் மூழ்கி இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

யா/உடுவில் கணேச வித்தியாலயம்,
சுன்னாகம். (சி/551720)
**ஆசிரிய கழகம்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் முன்னாள் அதிபரும்
அருட்சகோதரியுமான
**இக்னேசியா சூசைப்பிள்ளை**
(அதிபர், யா/இளவாலை கன்னியர் மடம் ம.வி)
அவர்கள் 03.03.2008 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு பெருந்துயர் அடைவதோடு எமது கல்லூரியின் சார்பாக அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் யாழ்.திருக்குடும்ப சகோதரிகளுக்கும், குடும்பத்தாருக்கும், பாடசாலைச் சமூகத்தினருக்கும் எமது உளமார்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு எமது கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கையாக்குகின்றோம்.

நெடுந்தீவு.
(71758)
யா/நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி சமூகம்.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**செல்லத்துரை தனேந்திரகுமாரன்**
(கான இசைமணி ரங்கன்)
மலர்வு: 15.10.1948
உதிர்வு: 10.03.2005

எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவு எங்கள் நெஞ்சை விட்டகலாது
எங்கள் குடும்பத் தலைவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (71751)
**குடும்பத்தினர்.**

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**தம்பையா குகதாசன்**
(இளைப்பாறிய ஆசிரியர்,
கோண்டாவில் இராமகிருஷ்ண
மகாவித்தியாலயம்)
தோற்றம்: 17.12.1947
மறைவு: 15.02.1999
திதி: அமாவாசை
(07.03.2008)

ஆண்டுகள் ஒன்பது ஆனாலும்
நினைவுகள் என்றும் நிலைத்து நிற்கும்
பாசங்கள் மனதினில் இருந்ததனால்
பிரிவுகள் என்பதை நினைத்ததில்லை.
ஓம் சாந்தி!

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.
துயருடன்:
**மனைவி.**

(சி/551714)

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மஹிந்தரின் அரசுக்கு மகுடம் சூட்டும் மனித உரிமைகள் கண்காணிப்பகம்

இலங்கையில் பரவலாக இடம்பெறும் ஆள்கடத்தல்களும், பின்னர் காணாமற் போகச் செய்யப்படுதலும் ஒரு தேசியப் பிரச்சினையாக மாறியிருக்கின்றன. இலங்கை அரசே அவற்றுக்கு முழுப்பொறுப்பு என்று அப்பட்டமாக - வெளிப்படையாக - அம்பலப்படுத்தியிருக்கின்றது அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமைகள் கண் காணிப்பகம்.

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தம் 2006 இல் மீண்டும் ஆரம்பமானமை முதல் தனிப்பட்ட ஆள்கள் நூற்றுக்கணக்கில் பாதுகாப்புப் படையினராலும், அரசுத் தரப்புக்குச் சார்பான ஆயுதக் குழுக்களினாலும் காணாமற் போகச் செய்யப்பட்டிருக்கின்றார்கள். அப்படிக் காணாமற்போகச் செய்யப்பட்ட பலர் உயிரிழந்துவிட்டனர் என்று அஞ்சப்படுகின்றது என்பதும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் இவ்வாண்டுக்கான முக்கிய கூட்டத் தொடர் ஜெனிவாவில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இலங்கையில் மிகவும் மோசமடைந்துவரும் மனித உரிமைகள் விவகாரமும் இந்தக் கூட்டத் தொடரில் அக்கு வேறு ஆணி வேறாகப் பிய்த்து உதறப்படும் என எதிர்பார்க்கப்படுகின்ற சூழலிலேயே மனித உரிமைகள் கண்காணிப்பகம் இவ்வாறு இலங்கை அரசின் பொட்டுக்கேட்டைப் போட்டுடைத்து அம்பலப்படுத்தியிருக்கின்றது.

'தொடரும் பயங்கரம்: இலங்கையில் கடத்தல், காணாமற் போதல்களில் அரசின் பொறுப்பு' - என்ற தலைப்பில் 241 பக்க அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டு, மஹிந்தர் அரசின் முகமூடியைக் கிழித்து, அதன் உண்மைச் சொரூபத்தை உலகுக்கு அம்பலப்படுத்தியிருக் கின்றது மனித உரிமைகள் கண்காணிப்பகம்.

பல நூற்றுக் கணக்கில் இடம்பெற்றுள்ள - ஆள்களைக் கடத்திப் பின்னர் காணாமற் போகச் செய்யப்பட்ட - சம்பவங்களில் 99 துன்பியல் நிகழ்வுகள் குறித்து இந்த அறிக்கை விரிவாக ஆராய்கிறது. இச்சம்பவங்கள் தொடர்பாக அரசுத் தரப்பின் பதிலும், பிரதிபலிப்பும் திருப்திகரமானவையாக அமையவில்லை என்றும் அந்த அறிக்கை தெளிவுபடுத்துகின்றது.

2006, 2007 ஆம் ஆண்டுகளில் உலகில் வேறெந்த நாடுகளையும் விட இலங்கையே காணாமற்போனோர் பற்றிய விவகாரத்தில் முன்னணியில் திகழ்வதாக 'விருப்புக்கு மாறாக - பலவந்தமாக - ஆட்கள் காணாமற்போகச் செய்யப்படுதல் தொடர்பாக ஆராயும் ஐ.நா. செயலணிக் குழு' பதிவு செய்திருக்கையிலேயே, மனித உரிமைகள் கண்காணிப்பகத்தில் தற்போதைய அறிக்கை, இந்த 'மகுடத்தை' மஹிந்தரின் அரசுக்குச் சூட்டியிருக்கின்றது.

அது மட்டுமல்ல. அது இன்னொரு விடயத்தையும் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

''முன்னர் மனித உரிமைகளுக்காகப் போராடிய ராஜபக்ஷவே, இன்று பலவந்தமாக ஆள்கள் காணாமற் போகச் செய்யப்படுதலில் உலகில் மிக மோசமான சூத்திரதாரிகளைக் கொண்ட அரசு ஒன்றுக்குத் தலைமை வகித்து வழி நடத்துகின்றார்'' - என்ற விருதும் வழங்கியிருக்கின்றது அந்த அமைப்பு.

இவ்வாறு உலகிலேயே மிக மோசமான கொடூரத்தை - அதுவும் பல நூற்றுக்கணக்கில் ஆள்களைக் காணாமற் போகச் செய்யும் அராஜகத்தை - வெறும் மனித உரிமை மீறலாக மட்டும் அடையாளப்படுத்தி விடமுடியாது.

அதுவும் சட்ட ரீதியான - இறைமையுள்ள - ஓர் அரசாகத் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்ட ஒரு நிர்வாகம் இப்படிப் பயங்கரவாத அமைப்புப்போலச் செயற்பட முடியாது.

அத்தகைய சட்டரீதியான அரசு என்று தன்னை அழைத்துக் கொள்ளும் ஒரு கட்டமைப்பு இத்தகைய மனித உரிமை மீறல்களை 'அரச பயங்கரவாதமாக' யுத்தம் ஒன்றின் பெயரால் கட்டவிழ்த்துவிடும்போது அது மனித குலத்துக்குச் எதிரான போரியல் குற்றக் கொடூரமாகக் கருதப்படவேண்டும்.

இத்தகைய குற்றங்களின் சூத்திரதாரிகள், முன்னாள் சேர்பியத் தலைவர் மிலோசிவிச் போல சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படவேண்டியவர்களாவர்.

இதேவேளை, இத்தகைய கொடூரங்களுக்குக் காரணமான இலங்கை அரசு குறித்து நீதியான நடவடிக்கைகளை எடுக்குமாறு இலங்கையின் சர்வதேச சகாக்களை - குறிப்பாக இந்தியா, ஜப்பான் போன்ற இலங்கைக்கு உதவும் நாடுகளை - மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்திக் கேட்டிருக்கின்றது.

*''மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்குக் காரணமான நாடுகளுக்கும் அரசுகளுக்கும் கண்ணை மூடிக் கொண்டு உதவி புரியாதீர்கள்.*

*காணாமற் போகச் செய்தல் செயற்பாட்டை நிறுத்துவதையும் -*

*அக்குற்றங்களைப் புரிந்தோருக்குத் தண்டனையிலிருந்து சட்ட விலக்களிப்பு வழங்கும் கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டுவருவதையும் -*

*இலங்கையில் சர்வதேசக் கண்காணிப்புப் பொறிமுறை செயற்படுத்தப்படுவதை ஏற்றுக் கொள்வதையும் -*

*மனித நேய அடிப்படையில் அமையாத உதவிகளையும், இராணுவ உதவிகளையும் வழங்குவதற்கான முன் நிபந்தனைகளாக இலங்கைக்கு விதியுங்கள்''* - என்று அந்த அமைப்பு இந்த நாடுகளைக் கேட்டிருக்கின்றது.

உலகில் இலங்கைத் தேசத்தின் கீர்த்தியை 'ராஜபக்ஷ சகோதரர்கள் அன்ட் கம்பனி' முன்னிலையில் கொண்டு போய் நிறுத்தியிருக்கின்றது என்பதையே மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தற்போதைய அறிக்கை மகுடம் சூட்டி அம்பலப்படுத்தியிருக்கின்றது.

# எம்.ஜி.ஆர். காலத்திலேயே இந்திய அரசு எங்களைப் பொறிக்குள் வீழ்த்தப் பார்த்தது

கிளிநொச்சி,மார்ச் 7

எம்.ஜி.ஆர். காலத்திலேயே இந்திய மத்திய அரசு எம்மைப் பொறிக்குள் வீழ்த்தப் பார்த்தது. பாலா அண்ணா அதனைத் தனது சாதுரியத்தினால் தவிர்த்தார்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன்.

அரசு மிகவும் தீவிரமாக இருந்தது.

எங்களின் விடுதலைப் போராட்டத்துக்கு எதிராகச் செயற்படுகிற பல சக்திகள், பாலா அண்ணாவின் உயிரை எவ்வாறு பறிக்கலாம் - அவரை எவ்வாறு சாகடிக்கலாம் என்பதில் தீவிரமாக இருந்தார்கள்.

இவையெல்லாம் அவர் எதிர்நோக்கிய ஆபத்துகள் மட்டுமே.

படுத்திக் கொண்டிருந்தார்.

எவ்வாறு திருச்சியையும் சென்னையையும் பிரிக்கலாமோ எவ்வாறு தூத்துக்குடியையும் சேலத்தையும் பிரிக் கலாமோ அப்படிப் பிரித்து கலெக்டர் (ஆட்சியர்) என்ற வேலையைச் செய்யச் சொல்வதுதான் அதன் அர்த்தம் என்ற விளங்கப்படுத்தினார்.

அத்துடன் மட்டுமல்ல, இந்திய மத்

## எனினும் பாலா அண்ணாவின் சாதுரியத்தினால் அது தவிர்க்கப்பட்டது என்கிறார் அரசியல்துறைப் பொறுப்பாளர் நடேசன்

கிளிநொச்சியில் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கத்தின் ''இரு இந்தி



யத் தலைவர்களும் விடுதலைப் புலிகளும்'' மற்றும் ''விடுதலை'' ஆகிய நூல்களின் வெளியீட்டு விழாவில் உரை நிகழ்த்தும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

1980 களின் இறுதிப்பகுதிகளில் இந்தியத் தலைநகர் புதுடில்லியில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நடத்திய முதலமைச்சர்கள் பேரம், எம்.ஜி.ஆர். கொண்ட கோபம் அதனால் ஏற்பட்ட விளைவுகள் குறித்து அவர் தனதுரையில் விளக்கினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இந்த விடுதலைப் போராட்டத்தில் தனது பங்களிப்பைப் பால அண்ணா பெரிய அளவில் செய்திருக்கின்றார்.

பாலா அண்ணா தொடர்பாக நாம் நிறைய கதைத்துக் கொண்டிருக்கலாம். எதிரி, பாலா அண்ணையை எவ்வாறு இல்லாது செய்யலாம் - எவ்வாறு அவரைக் கொல்லலாம் என்று நீண்ட காலமாகவே - அவர் இந்தியாவிலிருந்த காலத்திலிருந்து இறுதிக் காலம் வரை முயற்சித்தான்.

இந்தியாவில் அவர் இருந்தபோது அவரது உயிரைப் பறிப்பதற்காகச் சிறிலங்கா அரசாங்கம் குண்டு வைத்தது. அவர் இறுதிக்காலத்தில் நோய்வாய்ப்பட்ட காலத்தில் கூட - அவர் வெளியில் சென்று சிகிச்சை பெறுவதற்குக் கூட சிறிலங்கா அரசு அவரை அனுமதிக்கவில்லை.

நாம் சிறிலங்காவுக்கு எதிராகப் போராடும் நிலையில் அவர்கள் எப்படி நம்மை அனுமதிப்பார்கள் என்று நீங்கள் எண்ணலாம்.

உண்மையில் பல விடுதலைப் போராட்டக் களங்களில் இத்தகையதொரு மனிதாபிமானச் செயற்பாடுகள் நடைபெறுவது வழக்கமாக இருந்திருக்கின்றது.

பாலா அண்ணாவின் உயிர் பறிக்கப்படவேண்டும் என்பதிலும் அவர் இறக்கவேண்டும் என்பதிலும் சிங்கள

எமது தேசியத் தலைவர் அவர்கள் இந்தியாவிலிருந்து தமிழீழத்துக்குத் திரும்பிய பின்னர் நாம் சென்னையில் தங்கியிருந்தோம்.

அப்போது ஒருநாள், மறைந்த தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் எங்களை அழைத்து ''நீங்கள் டில்லிக்கு வரவேண்டும். அங்கே டில்லி அரசு உங்களோடு கதைக்கவேண்டுமாம்'' என்று கூறினார். நானும் பாலா அண்ணாவுடன் கூடவே அன்றைய தமிழக முதல்வர் எம்.ஜி.ஆருடன் டில்லிக்குச் சென்றிருந்தோம்.

அங்கு டில்லிக்குச் சென்ற நாம் ஒரு விடுதியில் தங்க வைக்கப்பட்டோம். எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழ்நாடு இல்லத்தில் தங்கியிருந்தார்.

அப்போது டில்லியில் உள்ள இராஜதந்திரிகள் மற்றும் உளவுத்துறையினர் எம்மைச் சந்தித்து ஓர் அரைகுறையான தீர்வுக்கு முதலில் போகும்படியும் அதனிலிருந்து தொடர்ச்சியாகப் போகலாம் என்றும் கூறி எங்களுக்குப் பல்வேறு நெருக்கடிகளையும் அழுத்தங்களையும் தந்துகொண்டிருந்தனர்.

அப்போது எம்.ஜி.ஆர். அவர்கள் எங்களைத் தனியாக அழைத்து உரையாடும்போது, வடக்கும் - கிழக்கும் இணைந்திருந்தால் ஒரு முதலமைச்சர் - வடக்கு வேறு கிழக்கு வேறாக இருந்தால் 2 முதலமைச்சர்கள் என்று இந்திய அரசு எமக்குக் கூறியதாகத் தெரிவித்தார். இந்திய அரசு இப்படிச் சொல்வதற்கு என்ன அர்த்தம் என்று எம்.ஜி.ஆர் அவர்கள் எங்களிடம் கேட்டார்.

அதற்குப் பாலா அண்ணா, எம்.ஜி. ஆரிடம் இந்தியாவின் நயவஞ்சக மான சூழ்ச்சியை மிக இலகுவாக விளங்கப்

திய அரசு எவ்வாறு எங்களை ஒரு பொறிக்குள் வீழ்த்தப்போகிறது என்பதனையும் பாலா அண்ணா, முதல்வராக இருந்த எம்.ஜி. ஆரிடம் விளக்கினார்.



அப்போது பாலா அண்ணா அளவளாவிய முறையைத் தான் குறிப்பிட வேண்டும்.

எமது தேசியத் தலைவர் மீது கொண்ட பாசம் - பற்றுக் காரணமாக, ''இப்படிச் செய்கிறார்களே'' என்று எம்.ஜி.ஆர். அவர்களுக்குக் கோபம் வந்து உடனடியாகவே எங்களையும் அழைத்துக் கொண்டு தமிழ்நாடு திரும்பினார்.

மேலும் ''சிறிலங்கா அரசாங்கத்துடன் போராட உங்களுக்கு என்ன தேவை? என்று எம்.ஜி.ஆர். அவர்கள் கேட்டார். தேசியத் தலைவரின் அனுமதியோடு அப்போது பாலா அண்ணா பல வேண்டுகோள்களை எம்.ஜி.ஆரிடம் முன்வைத்தார்.

அதனை உடனே எம்.ஜி.ஆர். நிறைவேற்றியதோடு மட்டுமல்லாமல் - தமிழக சட்ட சபையில் பல தீர்மானங்களையும் நிறைவேற்றினார்.

தேசியத் தலைவர் அவர்கள் தமிழீழத்திலிருந்து பல அரசியல் கோட்பாடுகளைக் கூறியபோது அதற்குத் தத்துவ வடிவம் கொடுத்து செயற்படுத்திய விதத்தை இதுவரை எந்த அரசியல் அறிஞரிடமும் நாம் கண்டதில்லை - என்றார் அவர்.

(50)

# சமையல் எரிவாயு சிலிண்டர்கள் யாழ்.நகரில் வேறுபட்ட விலைகளில் விற்பனை என விசனம்

யாழ்ப்பாணம்.மார்ச்7

யாழ்.நகரில் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வேறுபட்ட விலைகளில் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

சில கடைகளில் நிர்ணய விலையிலும் சில கடைகளில் அதனை விட அதிகரித்த விலையிலும் விற்பனை செய்வதாகவும் நுகர்வோர் சுட்டிக்காட்டுகின்றனர்.

கொழும்பில் இருந்து கப்பல் மூலம் தருவிக்கப்படும் இந்த சமையல் எரிவாயு சிலிண்டர்களுக்கு யாழ்.அரச அதிபரால் அண்மையில் விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

விலை நிர்ணயத்தையும் மீறி அதிகரித்த விலைக்கே சமையல் எரிவாயு சிலிண்டர்கள் விற்பனை செய்யப்பட்டு வருவது குறித்து விசனம் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் கப்பல் மூலம் தனியார் வர்த்தகரால் தருவிக்கப்பட்ட பச்சை நிறத்திலான சமையல் எரிவாயு சிலிண்டர் 3 ஆயிரத்து 750 ரூபாவாகவும், மஞ்சள் நிறத்திலான சமையல் எரிவாயு சிலிண்டர் 3 ஆயிரத்து 500 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

மாறுபட்ட விலைகளில் அதுவும் அதிகரித்த விலையில் விற்பனை செய்யாது சரியான விலையில் விற்பனை செய்யப்படுவதை அரச அதிபர் உறுதிப்படுத்த வேண்டும் என்று மக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (202-224)

## யாழ்.மாவட்டத்தில்

# 'நிக்கொட்' 710 மில்லியன் ரூபா செலவில் 106 திட்டங்களை நிறைவு செய்துள்ளது

நல்லூர்,மார்ச்7

யாழ்.மாவட்டத்தில் 'நிக்கொட்' அமைப்பால் 710 மில்லியன் ரூபா நிதிச் செலவீட்டின் மூலம் 106 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ள என அமைப்பின் மாவட்ட பிரதிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

மாவட்டத்தில் அனுமதிக்கப்பட்ட 169 அபிவிருத்தித் திட்டங்களை 'நிக்கொட்' மேற்கொண்டு வருகின்றது. இதற்கென ஆயிரத்து 556 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவற்றுள் 106 திட்டங்கள் பூர்த்தி யாக்கப்பட்டுவிட்டன எனப் பிரதிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (202-111)

## நாளை

| | |
|---|---|
| மாசி - 25 | 08.03.2008 சனிக்கிழமை |
| திதி: பிரதமை | மு.இ. 09.57 வரை |
| நட்சத்திரம் : | பூரட்டாதி பி.ப. 04.23 வரை |
| சுபநேரம் : | 03.24 - 04.54 |
| ராகுகாலம் : | 09.24 - 10.54 |

# கொமர்ஷல் வங்கி யாழ்.கிளையின் 'அருணலு' பரிசளிப்பு சிறப்புற நடைபெற்றது

நல்லூர்,மார்ச்7

கடந்த ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்ட மட்டத்திலும் பாடசாலை மட்டத்திலும் முதல் மூன்று இடங்களில் சித்தியடைந்த கொமர்ஷல் வங்கியின் யாழ்.கிளையில் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் மாணவர்களை வங்கி பரிசில்கள் வழங்கிக் கௌரவித்தது.

'அருணலு' பரிசுத்திட்ட விழா நேற்று வங்கி முகாமையாளர் எஸ்.ரவீந்திரா தலைமையில் வங்கிக் கிளையில் நடைபெற்றது.

வங்கியில் அருணலு கணக்குத் திட்டத்தில் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் புலமைப்பரிசில் சித்தியடைந்த சுமார் 50 சிறுவர்கள் இதில் கலந்துகொண்டு பரிசில்களைப் பெற்றுக்கொண்டனர்.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் வி.விக்கினேஸ்வரன், பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ். மாதவகுமாரன் உட்பட வங்கிய உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள் சிறுவர்களுக்கான பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர்.

நிகழ்வில் பெற்றோர்கள், ஆசிரியர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (202-111)

# ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் போல் ஈழத் தமிழர் விவகாரத்தில் இந்தியாவின் நடவடிக்கை

## கண்டிக்கிறது திராவிடர் கழக 'விடுதலை' ஏடு

சென்னை, மார்ச்7

ஈழத் தமிழர்களைப் படுகொலை செய்து வரும் இலங்கை இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை இந்திய அரசு அழைத்ததற்கு தமிழ்நாட்டின் திராவிடர் கழகம் கடும் கண்டனம் தெரிவித்திருக்கிறது.

திராவிடர் கழகத்தின் அதிகார வழி ஏடான 'விடுதலை'யின் புதன்கிழமைப் பதிப்பில் எழுதப்பட்டுள்ள தலையங்கத்திலேயே இக்கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

இலங்கை இராணுவத் தளபதியை இந்தியாவுக்கு அழைத்து, காஷ்மீர் பகுதியில் இந்தியாவுக்குச் சொந்தமான இராணுவ முகாமில் சில சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. இலங்கை இராணுவத்துக்குப் போர்ப் பயிற்சி அளிக்கப்படமாட்டாது என்று பல தடவைகளில் இந்தியா அளித்து வந்த உறுதிமொழிக்கு எதிரான நடவடிக்கை இது என்பதில் ஐயமில்லை.

இலங்கை அரசுக்குச் செய்யப்படும் எந்த வித உதவியும் உறுதியாக அங்கு வாழும் தமிழர்களுக்கு எதிரானது என்பது பால பாடமாகும். எதிலும் விடுதலைப் புலிகளை மட்டும் மனதில் இருத்திக்கொண்டு ஒரு வழிப்பாதையாக இந்தியா செயல்படுவது கண்மூடித்தனமானதாகும்.

இலங்கையைப் பொறுத்தவரை அதன் அண்டை நாடுகளுடன் போர் நடத்தும் சூழல் இல்லை. இந்த நிலையில் இலங்கை ஒவ்வொரு ஆண்டும் தனது வரவு-செலவுத் திட்டத்தில் போர் ஆயுத தளபாடங்களை வாங்குவதற்குத்தான் பெரும் தொகையைச் செலவழிக்கின்றது. இந்த ஏற்பாடுகள் அனைத்துமே அங்கு வாழும் தமிழினத்தைப் பூண்டோடு ஒழிப்பதற்காகத்தான் என்பது இந்திய அரசுக்குத் தெரியாத ஒன்றல்ல.

செஞ்சோலை என்ற இடத்தில் பச்சிளம் குழந்தைகளைக் கூட குண்டுபோட்டு அழித்த இலங்கை இராணுவத்தின் - மனித நேயமற்ற மூர்க்கத்தனத்திற்குப் பிறகும் கூட, அதற்கு ஊக்கம், ஊட்டம் அளிக்கும் வகையில் இந்திய அரசு நடந்துகொள்கிறதே - இதன் பொருள் என்ன?

சேர்பியாவிலிருந்து கொசோவோ தனி நாடாகப் பிரிந்து செல்வதாக அறிவித்ததை வரவேற்கும் இந்திய அரசு, ஈழத்தில் வாழும் உரிமைக்காகப் போராடும் தமிழ் மக்களை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் அணுகுவது ஏன்?

தமிழ்நாட்டு மக்களும், தமிழ்நாடு அரசும் ஈழத்தில் தமிழர்களுக்கு இழைக்கப்படும் வன்கொடுமைகளைப் பல நேரங்களில் சுட்டிக்காட்டி வந்துள்ள நிலையில், அதனைச் சற்றும் பொருட்படுத்தாமல், ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்கிற முறையில் இந்தியா நடந்துகொள்ளலாமா?

உலகம் முழுவதும் உள்ள தமிழர்களும், மனிதநேயர்களும், மனித உரிமைச் சிந்தனையாளர்களும் இந்தியாவின் இத்தகைய போக்குக் குறித்து எப்படி நினைப்பார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டாமா?

ஈழத்தில் தமிழர்கள் வாழும் பகுதியில் மின்சாரம் என்றால் என்னவென்றே தெரியாத ஒரு நிலையை சிங்கள அரசு உருவாக்கி வைத்துள்ளது.

**கொள்ளிக்கட்டையால் தலையைச் சொறிந்தது போல**

இந்த நிலையில் தமிழ்நாட்டில் கூடங்குளத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்திலிருந்து இலங்கைக்கு மின்சாரம் வழங்கப்பட உள்ளது என்கிற செய்தி வெளிவருகிறது. வெந்த புண்ணில் வேல் பாச்சுவது என்று சொல்வார்களே, அது இது தான் போலும்.

இந்தியாவுக்கும் அண்டை நாடுகளுக்கும் போர் நடந்த காலகட்டங்களில் எல்லாம் இலங்கை அரசு இந்தியாவுக்கு எதிராகத்தான் நடந்துகொண்டிருக்கிறது என்ற உண்மைகளை நன்கு அறிந்திருந்தும், கொள்ளிக்கட்டையை எடுத்துத் தலையைச் சொறிந்ததைப்போல இலங்கை இராணுவத்திற்கு இந்திய இராணுவம் நேசக் கரம் நீட்டுகிறது - பயிற்சிகளை அளிக்கிறது - போர்க் கருவிகளை வாரி வழங்குகின்றது. தமிழர்களின் உணர்வை உரிய வகைகளில் எல்லாம் வெளிப்படுத்திய பிறகும், இந்தியாவின் நிலை இதுதானா? - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# வாகனங்களில் காந்தக்குண்டு பொருத்தி தாக்குதல்கள் நடத்தப் புலிகள் திட்டமாம்

## இராணுவப் பேச்சாளர் கூறுகிறார்

கொழும்பு, மார்ச்7

கொழும்பு நகரில் நிறுத்தி வைக்கப்படும் வாகனங்களில் காந்தங்களைப் பயன்படுத்தி குண்டுகளைப் பொருத்த புலிகள் திட்டமிட்டுள்ளனர் என புலனாய்வுத் தகவல்கள் மூலம் அரசுக்குத் தெரிய வந்துள்ளது. இது குறித்து வாகன உரிமையாளர்கள் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும்.

- இவ்வாறு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதயநாணயக்கார தெரிவித் துள்ளார்.

நாட்டின் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக விளக்கமளிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுக் காலை தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எந்தவகையிலாவது கொழும்பில் குண்டுத் தாக்குதல்களை நடத்தி நாட்டில் குழப்ப நிலையை ஏற்படுத்த புலிகள் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். படையினர் அண்மையில் கொழும்பில் நடத்திய தேடுதலின்போது காந்தங்கள் பொருத்தப்பட்ட சிறியரகக் குண்டுகள் மீட்கப்பட்டன. இவ்வாறான குண்டுகளை அவர்கள் கொழும்பில் தனியான இடங்களில் நிறுத்திவைக்கும் வாகனங்களில் மிக இலகுவாகப் பொருத்திவிடமுடியும்.

எனவே, கொழும்பில் தனியான இடங்களில் வாகனங்களை நிறுத்தி வைப்பவர்கள் தமது வாகனத்தை மீண்டும் இயக்க முன்னர் அதனை நன்கு பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.

அத்துடன், மின்மாற்றிகளில் குண்டுகளைப் பொருத்தும் நடவடிக்கைகளிலும் புலிகள் ஈடுபட்டுள்ளனர். புத்தளம் பிரதேசத்திலேயே இவ்வாறான முயற்சிகள் அதிகம் நடைபெற்று வருகின்றன. கடந்த சில தினங்களில் புத்தளம் பிரதேசத்தில் 6 குண்டுகள் மின்மாற்றிகளில் புலிகளால் பொருத்தப்பட்டன. அவற்றில் இரண்டு குண்டுகள் வெடித்தன. ஏனைய நான்கு குண்டுகளும் கண்டுபிடிக்கப்பட்டு அகற்றப்பட்டன. மின் மாற்றிகள் வெடித்துச் சிதறினால் இருளில் மூழ்கி அவதிப்பட வேண்டியது அப்பாவிப் பொதுமக்களே. எனவே, இவ்வாறான நாசகாரச் செயல்கள் நடைபெறுவதைத்தடுக்க மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் - என்றார். (சி)

# ஆள்கடத்தல் சம்பவங்களில் படையினருக்குத் தொடர்பில்லை

## விசாரணை ஆணைக்குழுத் தலைவர் கருத்து

கொழும்பு,மார்ச்7

நாட்டில் இடம்பெற்ற காணாமல்போதல் மற்றும் ஆள்கடத்தல் சம்பவங்களுடன் பாதுகாப்புப் படையினருக்கோ அல்லது பொலிஸாருக்கோ எந்தவித சம்பந்தமும் இல்லையென்பது விசாரணைகளின் பின்னர் தெரியவந்துள்ளதாக காணாமல் போதல்கள் மற்றும் ஆள்கடத்தல்கள் தொடர்பான விசாரணை ஆணைக் குழுவின் தலைவரும் நீதியரசருமான மகாநாம திலகரத்ன தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

ஆள்கடத்தல்கள் சம்பந்தமாக முன்வைக்கப்பட்ட 525 முறைப்பாடுகளில் 295 சம்பவங்களுடன் தொடர்பான விசாரணைகள் பூர்த்தியடைந்துள்ளன. அத்துடன், கடத்திச் செல்லப்பட்டனர் எனக் கூறப்பட்ட 250 பேர் திரும்பி வந்திருக்கின்றனர்.

கப்பம் பெறுதல் மற்றும் ஆள்கடத்தல் போன்ற சம்பவங்களுடன் பொலிஸாரோ அல்லது முப்படையினரோ தொடர்புபட்டிருக்கின்றனர் எனக் கூறப்பட்ட குற்றச் சாட்டுகளுக்கு இதுவரை நடைபெற்றுள்ள விசாரணைகளின் பிரகாரம் எவ்வித சான்றும் இல்லை யெனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (க -09)

## மகளிர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்7

தென்மராட்சி பிரதேச கிராம அபிவிருத்தி சங்கங்களின் சமாசமும் சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் வலுவூட்டல் அமைச்சின் மகளிர் விவகார அமைப்புகளும் இணைந்து நடத்தும் சர்வதேச மகளிர் தின விழா நாளை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி நகரசபைக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

சமாச உதவிச் செயலாளர் திருமதி யோகேஸ்வரி தவபாலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் கலந்து கொள்வார்.

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி நடத்தப்பட்ட கவிதை, பேச்சு, நாடகம் ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசில்கள் நிகழ்வில் வழங்கப்படும்.

பிரதேச மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மகளிர் அபிவிருத்தி நிலைய மாணவிகள், மகளிர் விவகார அமைப்புகளின் உறுப்பினர்கள் ஆகியோரின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

(202-207)

# வாசகர் திருமுகம்

## ஏன் இந்தச் சேவையினைத் துண்டிக்கிறார்கள்?

ஊர்காவற்றுறை நகருக்கு யாழ்.நகரிலிருந்து 777, 780 ஆகிய வழி இலக்க வீதிகளூடாக இ.போ.ச.பேருந்தும், தனியார் சிற்றூர்திகளும் சேவையில் ஈடுபட்டு வருகின்றன. தீவுப்பகுதியிலிருந்து யாழ்.நகருக்கு பல துறைகளிலும் கடமை புரிபவர்கள் நாளாந்தம் இப்போக்குவரத்துச் சேவையினை நம்பியே தினமும் பயணித்து வருகின்றனர்.

யாழ்.நகரிலிருந்து ஊர்காவற்றுறைக்கான இறுதி நேர இ.போ.ச.பேருந்துகள் 780 வழி இலக்க வீதியூடாக பி.ப. 4.30 இற்கும் 777 வழி இலக்க வீதியூடாக பி.ப 5 மணிக்கும் புறப்படுகின்றன. ஆனால் மாதத்தில் குறைந்தது 8 தடவைகள் 780 வழி இலக்க பேருந்து இரு வழிச் சேவையாக புளியங்கூடல் சந்தி ஊடாக சரவணைச் சந்தி சென்று பின்னர் 777 வழி இலக்கமூடாக ஊர்காவற்றுறை நோக்கி செல்கின்றன. இதனால் சின்னமடு தொடக்கம் கரம்பொன் கிராமம் வரையிலான பயணிகள் புளியங்கூடல் சந்தியில் இறங்கி கிட்டத்தட்ட 7 கி.மீ. தூரம் நடந்து தமது வீடுகளைச் சென்றடையும் பொழுது 6.30 மணி ஆகிவிடுகின்றது.

இது இவ்வாறு இருக்க 777 வழி இலக்க வீதி ஊடாக பி.ப.4 மணிக்கு ஒரு பேருந்தும் 5 மணிக்கு ஒரு பேருந்தும் செல்கின்றன. அவ்வாறாயின் ஏன் இந்நேரக் கணிப்பாளர்கள் 780 வழி இலக்க வீதியுடனான இறுதி நேர சேவையினை துண்டிக்கின்றார்கள்? இது தொடர்பாக கலந்துரையாடலாம் என்று பயணிகள் நின்றால் நேரக் கணிப்பாளர்கள் முன்வருகிறார்களில்லை. இப் பயணிகள் படும் அவலத்தை யாரிடம் சொல்வது?

தீவகம் வடக்கு. கஜமுகன்.

## கொழும்புத்துறை மேற்கு விதானையார் வீதியின் அவலநிலை

கொழும்புத்துறை மேற்கு, விதானையார் வீதி, பல வருடங்களாகத் திருத்த வேலைகள் எதுவும் மேற்கொள்ளாமையால் பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், வியாபாரிகள் மற்றும் பிள்ளையார் கோயில், மாதாகோயில் பக்தர்கள் யாவரும் துண்டிச் சந்தியூடாக செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது. கடந்த 5,6 வருடங்களாக இவ் வீதி தொடர்பாக எடுத்துக் கூறப்பட்டுள்ள நிலையிலும் எதுவித பயனுமில்லை.

தற்பொழுது இவ்வீதி வழியான போக்குவரத்து குறைந்துள்ளமையினைப் பயன்படுத்தி சட்டவிரோத கசிப்பு விற்பனை, விறகு கடத்தல் என்பன நடைபெற்று வருகின்றன. எனவே இச் சட்டவிரோத செயல்களை தடுக்கும் வண்ணமும் மக்களின் போக்குவரத்து வசதி கருதியும் தயவுசெய்து உரிய அதிகாரிகள் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்வ...கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

கொழும்புத்துறை மேற்கு. ம.சுந்தரம்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வில்வமலர் இராமநாதபிள்ளை



வட்டு. தென்மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதபிள்ளை வில்வமலர் 03.03.2008 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.03.2008) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பழைய ஆஸ்பத்திரி வீதி, வட்டுக்கோட்டை.* *(சி/557730)*

தகவல்: க.சிறிமுருகன் *(சகோதரன்).*

## N.K. *கிங்ஸ்லி*

**(ஓய்வுபெற்ற வங்கி உத்தியோகத்தர், மக்கள் வங்கி- திருகோணமலை)**

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி மொறிஸ் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் திருகோணமலை இல.19/1, உவர்மலை, மத்திய வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட N.K.கிங்ஸ்லி 05.03.2008 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா- ஞானம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு- கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மற்றும் கமலேஸ்வரியின் அன்புக் கணவரும் பகீரதி, ஜெயக்குமார் காலஞ்சென்ற அருள்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (07.03.2008) வெள்ளிக்கிழமை திருகோணமலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உவர்மலை, திருகோணமலை. 026 222 3035* *(71779)*

தகவல்: குடும்பத்தினர்.

# ரெய்லர், விக்ரோறியின் சிறப்பாட்டத்தால் 470 ஓட்டங்களைக் குவித்தது நியூஸிலாந்து



சதம் அடித்த ரோஸ் ரெய்லர்

ஹமில்ரன், மார்ச் 07

ரோஸ் ரெய்லரின் கன்னிச்சதம் மற்றும் டானியல் விக்ரோறியின் 88 ஓட்டங்கள் ஆகியன கைகொடுக்க இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் நியூஸிலாந்து அணி 470 ஓட்டங்களைக் குவித்தது.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸை ஆடிவரும் இங்கிலாந்து அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 87 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. நேற்றைய ஆட்டம் முடியும் தறுவாயில் இந்த இரண்டு விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது இங்கிலாந்து.

நியூஸிலாந்துக்குச் சுற்றுப்பயணம் செய்துள்ள இங்கிலாந்து அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடிவருகின்றது. தொடரின் முதல் போட்டி நேற்றுமுன்தினம் ஹமில்ரனில் ஆரம்பமானது. முதல்நாள் ஆட்டநேர முடிவில் நியூஸிலாந்து அணி 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 282 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ரோஸ் ரெய்லர் 54 ஓட்டங்களுடனும், அணித்தலைவர் விக்ரோறி 4 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று போட்டியின் 2ஆம் நாள் ஆட்டம் நடைபெற்றது. ரெய்லர் மற்றும் விக்ரோறி ஆகியோர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த விக்கெட்டுகளை வீழ்த்த இங்கிலாந்துப் பந்துவீச்சாளர்கள் திணறினர். அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய ரெய்லர் 185 பந்துகளை எதிர்கொண்டு தனது முதலாவது டெஸ்ட் சதத்தைப் பதிவுசெய்தார். மறுமுனையில் ஓரளவு அதிரடியாக ஆடிய டானியல் விக்ரோறி 100 பந்துகளை எதிர்கொண்டு தனது 15ஆவது டெஸ்ட் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார்.

இந்த ஜோடியைப் பிரிக்க முன்னணிப் பந்துவீச்சாளர்களை மாற்றிமாற்றிப் பார்த்து ஏமாற்றமடைந்த இங்கிலாந்து அணித்தலைவர் மைக்கல் வோகன் கடைசியில் கெவின் பீற்றர்ஸனைப் பந்துவீச அழைத்தார். அதற்கு உடனடிப் பலன் கிடைத்தது. 7ஆவது விக்கெட்டில் 148 ஓட்டங்கள் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் பீற்றர்ஸனின் சுழலில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார் ரோஸ் ரெய்லர். 235 பந்துகளை எதிர்கொண்ட அவர் 18 பவுண்டரிகளுடன் 120 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். ரெய்லர் பங்குபற்றிய 3ஆவது டெஸ்ட் போட்டி இதுவாகும்.

தொடர்ந்து கொலிங்வூட்டின் வேகத்தில் டானியல் விக்ரோறி 88 ஓட்டங்களுடன் (134 பந்துகள், 11 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்) விக்கெட்டைப் பறிகொடுத்தார். இறுதியில் நியூஸிலாந்து அணி 138.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 470 ஓட்டங்களைக் குவித்தது. இறுதிவரை ஆட்டமிழக்காமலிருந்த கைல் மில்ஸ் 5 பவுண்டரிகளுடன் 25 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

இங்கிலாந்தின் பந்துவீச்சில் சைட்பொற்றம் 4 விக்கெட்டுகளையும், கொலிங்வூட் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதல் இன்னிங்ஸை ஆடிய இங்கிலாந்து அணிக்கு ஆரம்பவீரர்களான அலஸ்ரியர் குக், மைக்கல் வோகன் ஆகியோர் சிறந்த அடித்தளத்தை இட்டுக்கொடுத்தனர். இருவரும் மிகவும் நிதானமாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர். முதல் விக்கெட்டுக்காக 37 ஓவர்களில் 84 ஓட்டங்கள் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் கிறிஸ் மாட்டினின் வேகத்தில் அலஸ்ரியர் குக் 38 ஓட்டங்களுடன் (118 பந்துகள், 4 பவுண்டரிகள்) ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து 'நைற் வோச்மன்' ஆகக் களமிறங்கினார் மத்தியூ ஹோகார்ட். மாட்டினின் வேகம் மீண்டும் அச்சுறுத்த அவரும் விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

நேற்றைய 2ஆம் நாள் ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து அணி 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 87 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. மைக்கல் வோகன் 44 ஓட்டங்களுடனும், ஸ்ரோரஸ் ஒரு ஓட்டத்துடனும் களத்தில் உள்ளனர்.

இன்று 3ஆம் நாள் ஆட்டம் தொடரும்.

# பிரவீண் குமாருக்கு விருது

புதுடில்லி, மார்ச் 07

ஆஸ்திரேலியாவில் நடந்த முத்தரப்புத் தொடரில் அசத்திய இந்திய இளம் வேகப்பந்துவீச்சாளர் பிரவீண் குமாருக்கு விருது வழங்கப்படும் என்று உத்தரபிரதேச அரசு அறிவித்துள்ளது.

பிரவீண் குமாரை கௌரவிக்கும் விதமாக அவருக்கு அந்த மாநிலத்தின் உயரிய விருதான கன்ஷிராம் கேல் ரத்னா விருது வழங்கப்படவுள்ளது. இதனை உத்தரபிரதேச முதலமைச்சர் மாயாவதி நேற்றுமுன்தினம் அறிவித்தார். மேலும் ரூ.10 லட்சம் பரிசுத் தொகையும் அவருக்கு அளிக்கப்படும் என்றும் மாயாவதி கூறினார்.

இதேவேளை, முத்தரப்புச் சம்பியன் பட்டத்தை வென்றதில் முக்கிய பங்காற்றிய பிரவீண் குமார் இனம்புரியாத மகிழ்ச்சியில இருக்கிறார்.

அவர் இதுதொடர்பாக கூறியவை வருமாறு:-




''சிட்னி மற்றும் பிரிஸ்பேனில் நடந்த 2 இறுதிப்போட்டியிலும் நான் தொடக்கப் பந்துவீச்சாளராக பந்துவீசினேன். அணித்தலைவர் டோனி புதிய பந்தை என்னிடம் தந்து ஒன்றை மட்டுமே கூறினார். உன் விருப்பப்படி பந்து வீசு என்றார். சிறப்பாகச் செயல்பட்டால் பலன் தானாகவே கிடைக்கும் என்றார். அதன்படியே செயல்பட்டேன். துடுப்பாட்ட வீரரைத் திணற வைக்க பந்தை சுவிங் செய்ய வேண்டும். விக்கெட்டுக்கு நேராக சற்று உயரே எழும்பும்படி பந்துவீச வேண்டும் என்பதே எனது விருப்பம். அதிக ஓட்டங்களை விட்டுக் கொடுக்காவிட்டால் - ஓட்ட விகிதத்தைக் குறைத்தால் எதிரணி நெருக்கடிக்குள்ளாகும் என்பது எனக்குத் தெரியும்.

''எனது 'ரோல் மாடல்' கபில்தேவ். அவரது ஆட்டத்தை நான் தொலைக்காட்சிகளில் உன்னிப்பாகக் கவனிப்பேன்.'' -இவ்வாறு பிரவீண் குமார் கூறினார்.

# ஆஸ்திரேலிய அணி வீரர்களை விட எனது மனவுறுதி அதிகம் - ஹர்பஜன்

சிட்னி, மார்ச் 07

ஆஸ்திரேலிய வீரர்களைவிடத் தாம் மிகுந்த மன உறுதியுடன் இருக்கின்றார் என இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங் கூறியுள்ளார்.

ஆஸ்திரேலியச் சுற்றுப்பயணத்தின் போது ஏற்பட்ட சர்ச்சைகள் தம்மை மிகவும் வலிமை பெற்றவனாக மாற்றின என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற முத்தரப்புத் தொடரில் கிண்ணத்தை வென்ற பின் இந்தியா திரும்பும் முன்பாக 'தி டெய்லி டெலிகிராப்' நாளிதழுக்குப் பேட்டி அளித்த ஹர்பஜன் சிங், ஆஸ்திரேலிய வீரர்களும் ரசிகர்களும் தனக்கு எதிராக நடத்திய தாக்குதல்கள் அவர்களையே பாதிக்கச் செய்தன என்று கூறியுள்ளார்.

தாம் சவால்களைச் சந்திக்க விரும்புகின்றார் என்றும் இதுபோன்ற சர்ச்சைகள் தம்மை எப்போதும் பாதித்ததில்லை என்றும் தம்மீது நடத்தப்பட்ட தாக்குதல்களைத் தாம் புறந்தள்ளிவிட்டார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தொடரில் இந்திய அணியின் ஆட்டம் பெருமிதம் அளிக்கும் வகையில் அமைந்திருந்தது என்றும் உலகின் முதல் அணியாக வரக்கூடிய வாய்ப்பு இந்திய அணிக்கு இருப்பதாகவும் ஹர்பஜன் தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடர்: மேற்கிந்தியத்தீவுகளின் தலைவராக கெய்ல்

ஜமேக்கா, மார்ச் 07

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடர் மற்றும் ஒருநாள் தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகளின் அணித்தலைவராக கிறிஸ் கெய்ல் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.



அணித்தலைவரான ராம்நரேஷ் சர்வான் தொடர்ந்தும் காயத்தால் அவதிப்பட்டுவருவதால் கிறிஸ் கெய்லே தற்காலிக அணித்தலைவராக நீடிப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கிந்தியத்தீவுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்யவுள்ள இலங்கை அணி, அங்கு 3 டெஸ்ட் போட்டிகளிலும், இரண்டு ஒருநாள் போட்டிகளிலும் விளையாடவுள்ளது. இத்தொடர் எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பமாகி ஏப்ரல் 15ஆம் திகதி முடிவடைகிறது.

2000ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட்டுக்கு அறிமுகமான கிறிஸ் கெய்ல் 70 டெஸ்ட் போட்டிகளில் இதுவரை விளையாடி 4658 ஓட்டங்களைக் குவித்துள்ளதோடு, 59 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார். 176 ஒரு நாள் போட்டிகளில் பங்குபற்றி 6244 ஓட்டங்களைச் சேர்த்துள்ளதோடு, 142 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார்.

# ஆஸி. வீரர்களுக்கு ஓய்வு வேண்டும் அணித்தலைவர் பொண்டிங் பேட்டி

பிரிஸ்பேன், மார்ச் 07

ஆஸ்திரேலிய வீரர்களுக்கு போதிய ஓய்வு அவசியமானது என்று அணித்தலைவர் ரிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவில் நடந்த முத்தரப்புத் தொடரில் இந்தியாவிடம் ஆஸி. அணி தோல்வியைத் தழுவியது. இதன் பிறகு ஆஸ்திரேலியா அணித்தலைவர் ரிக்கி பொண்டிங் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு:-

''தற்போது வீரர்கள் அதிகம் மாற்றம் செய்யப்படாததால் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் வீரர்கள் நீண்ட காலமாக போட்டியில் இருந்து விலகி இருக்க முடியாத நிலை நிலவுகிறது. கடந்த ஆண்டில் நாங்கள் ஆதிக்கம் செலுத்தினாலும் 2 இறுதிப்போட்டிகளிலும் தோல்வி கண்டோம். டெஸ்ட், ஒருநாள் ஆகிய இரண்டு போட்டியிலும் வீரர்கள் ஆடுவதால் வீரர்களுக்கு அதிக ஓய்வு அளிக்கப்படவேண்டும். அப்போதுதான் அவர்கள் இறுதிப் போட்டியில் புத்துணர்ச்சியுடன் செயல்பட முடியும்.

''மூத்த வீரர்கள் ஓய்வுபெறும்போது நாங்கள் புது வீரர்களை கொண்டுவருவது வழக்கமானதுதான். வீரரின் வயது அவரது ஆட்டத்திறன் திரும்ப உதவும் என்பது உறுதியில்லை. திறமைதான் வீரர்கள் தமது திறனுக்கு,வர உதவியாக இருக்கும். எங்களது மூத்த வீரர்கள் பலரும் இன்னும் அனைத்து திறமைகளுடன் உள்ளனர். இந்திய இளம் வீரர் இஷாந்த் ஷர்மா இந்தப் பயணத்தில் தன்னை நல்லபடியாக நிலை உயர்த்தி இருக்கிறார். அவரைப் பற்றி எல்லோரும் பேசுகிறார்கள். பல்வேறு கட்டங்களில் அவர் சிறப்பாகப் பந்து வீசியுள்ளார். பேர்த் டெஸ்டில் கடைசி நாளில் அவர் வீசிய பந்து வீச்சு நான் டெஸ்ட் போட்டியில் சந்தித்த மிகச் சிறந்த பந்துவீச்சுகள் சிலவற்றில் ஒன்றாகும்.

''இந்திய அணி எப்பொழுதும் சிறந்த இளம் வீரர்களை உருவாக்கக்கூடியதுதான். ஆனால், அந்த வீரர்கள் எதிர்வரும் காலங்களில் எப்படித் தங்கள் திறமைகளை மேம்படுத்துகிறார்கள் என்பதை பார்ப்பதுதான் ஆர்வமானதாகும்.

''ஹர்பஜன் சிங் சர்ச்சையால் நானும் சில ஆஸ்திரேலிய வீரர்களும் விமர்சனத்துக்கு ஆளானோம். பல விடயங்கள் தவிர்க்க முடியாமல் போய்விட்டது. நான் எந்தவித பிரச்சினையிலும் ஈடுபடவில்லை. ஹர்பஜன் விவகாரம் மோசமாகப் போய்விட்டது. அந்த விடயத்தை வித்தியாசமாகவும் சிறப்பாகவும் நான் கையாள முடியும் என்று நினைக்கவில்லை. ஹர்பஜன் சர்ச்சையால் ஆஸ்திரேலிய அணியின் ஆட்டம் பாதிக்கவில்லை. ஹர்பஜன்சிங் சிறப்பாக ஆடினார். அவர் முக்கிய விக்கெட்டுக்களை வீழ்த்தினார். எங்கள் அணியில் சைமண்ஸ், ஹைடன் ஆகியோர் நன்றாக ஆடினார்கள். நாங்களும் நன்றாக ஆடினோம் என்று நினைக்கின்றோம். ஹர்பஜன் சிங்குக்கு இது கடினமான பயணம். எனினும், அவர் கடைசியில் நிம்மதி அடைந்திருப்பார்.'' - இவ்வாறு பொண்டிங் கூறினார்.

# மூத்த வீரர்களை மறக்காதீர்! டெண்டுல்கர் வேண்டுகோள்

பிரிஸ்பேன், மார்ச் 07

இந்திய கிரிக்கெட் அணியிலுள்ள இளம் வீரர்கள் மிகச் சிறப்பாக ஆடி வருகின்ற போதும், அவர்கள் மூத்த வீரர்களின் பங்களிப்பை மறந்துவிடக் கூடாது என்று இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்திய ஒருநாள் போட்டி அணி, இளம் வீரர்களைக் கொண்டதாகத் திகழ்கிறது. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான வெற்றியை அடுத்து அவர்களுக்குப் பாராட்டுகள் குவிகின்றன.

இந்நிலையில், அணியின் நம்பிக்கை நட்சத்திரமான சச்சின் டெண்டுல்கர், அணியிலுள்ள இளம் வீரர்கள் அற்புதமாக விளையாடுகின்றனர் என்று பாராட்டியுள்ளார். அதே நேரத்தில், அவர்கள் மூத்த வீரர்களின் பங்களிப்பை மறந்து விடக்கூடாதுஎனவும் கூறினார்.

தொடர்ந்து 7,8ஆண்டுகளாக அணியில் விளையாடி வரும் வீரர்களும் அணியின் வெற்றிக்கு பெரும் பங்காற்றி இருக்கின்றனர் என்றும் சச்சின் தெரிவித்தார். மேலும், தன்னுடைய பங்களிப்புக் குறித்து அலட்டிக் கொள்ளாத அவர் அணியிலுள்ள அனைத்து வீரர்களுமே சிறப்பாக விளையாடினர் என்றும் பாராட்டியுள்ளார்.

1983ஆம் ஆண்டு உலகக் கிண்ண வெற்றிக்குப் பிறகு மகத்தான வெற்றியாக ஆஸ்திரேலியாவில் கிண்ணத்தை வென்றுள்ளமையைச் சுட்டிக்காட்டினார் சச்சின்.

ஆஸ்திரேலியாவை அதன் சொந்த மண்ணிலேயே வீழ்த்த வீரர்கள் உறுதி கொண்டிருந்தனர் என்றும், அதனை நிறைவேற்றிக் காட்டியிருக்கின்றார்கள் என்றும் அவர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

# பெங்களூர் டெனிஸ் காலிறுதியில் செரீனா

பெங்களூர், மார்ச் 07

பெங்களூர் பகிரங்க டெனிஸ் போட்டியில் அமெரிக்க முன்னணி வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

முன்னணி வீராங்கனைகள் பங்கேற்றுள்ள பெங்களூர் பகிரங்க டெனிஸ் போட்டி இந்தியாவில் நடந்து வருகிறது. இதன் ஒற்றையர் பிரிவில் நேற்றுமுன்தினம் நடந்த 2 ஆவது சுற்று ஆட்டத்தில் முன்னணி வீராங்கனை செரீனா வில்லியம்ஸ், இஸ்ரேல் வீராங்கனை டிபோராவை சந்தித்தார்.

இந்த ஆட்டத்தின் முதல் செற்றில் ஈடுகொடுத்த டிபோரா அடுத்த செற்றில் செரீனாவின் அதிரடி ஆட்டத்தைச் சமாளிக்க முடியாமல் திணறினார். முடிவில் செரீனா வில்லியம்ஸ் 7:5, 6:0 என்ற நேர் செற்களில் வெற்றிபெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

# தொழில்நுட்ப நிறுவனத்தில் பகிடிவதை எனப் புகார்

யாழ்ப்பாணம்,மார்ச்.7

யாழ்.உயர் தொழில் நுட்ப நிறுவனத்தில் புகுமுக மாணவ, மாணவிகள் மீது சிரேஷ்ட மாணவர்கள் பகிடிவதை மேற் கொண்டுவருகின்றனர் எனப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில நாள்களாக புகுமுக மாணவிகள் மீது சிரேஷ்ட மாணவர்கள் மோசமான முறையில் நடந்து கொள்கின்றனர் என்றும் சம்பந்தப்பட்டவர்களின் பெற்றோர் விச னம் தெரிவித்தனர்.

இதேவேளை, இது தொடர்பில் தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்திய புகுமுக மாண வர்களுக்கும் சிரேஷ்ட மாணவர்களுக் கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டதாக வும் சொல் லப்படுகிறது.

புகுமுக மாணவிகள் பகிடிவதையின் பின்னர் சேலை அணிந்து வகுப்புகளுக்கு சமுக மளித்ததையும் பெற்றோர்கள் சுட்டிக்காட்டினர். (அ-120-2)

## யாழ்.மாவட்ட எம்.பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டது. எனினும், அதற்கு முன்னரே அவர் மரணமானார் எனக் கூறப்பட்டது.

மாங்குளத்துக்குத் தெற்காக 2 கிலோ மீற்றர் தொலைவிலும் ஓமந்தையில் இருந்து 25 கிலேமீற்றர் தொலைவிலும் இத்தாக்குதல் ஏ-9 வீதியில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 1.20 மணியளவில் இடம்பெற்றது.

இத்தாக்குதலில் சிவநேசன் மற்றும் அவரது வாகனச் சாரதியான ஒரு பிள்ளையின் தந்தையான வவுனியா செட்டிகுளத்தைச் சேர்ந்த பெரியண்ணன் மகேஸ்வரராஜா (வயது 27) ஆகிய இருவரும் உயிரிழந்துள்ளனர்.

மேலும் வீதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த அருளானந்தம் லூயிஸ் நாதன் (வயது 13) என்ற சிறுவன் படுகாயமடைந்துள்ளான்.

உயிரிழந்த இருவரது சடலங்களும் மாங்குளம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. சிவநேசன் எம்.பியின் சடலம் இன்று வெள்ளிக்கிழமை கிளிநொச்சிக்கு எடுத்துவரப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

2004ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் யாழ். மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

1957ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21ஆம் திகதி கரவெட்டியில் பிறந்த இவர் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் கல்வி பயின்றவர்.

வடபிராந்திய தென்னை, பனை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளராக 96ஆம் ஆண்டில் இருந்து 2004 ஆம் ஆண்டுவரை பணியாற்றினார். யாழ்.தென்னை, பனை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசகத்தில் கணக்காளராகவும் பணியாற்றிய இவர், மல்லாவி மக்கள் அமைப்புக்களின் சம்மேளனத்தின் செயலாளராகவும் இருந்தார்.

சிவநேசன் தனது மனைவி, இரு மகன்மார், இரு மகள்மார்களை விட்டுப் பிரிந்துள்ளார்.

**[illegible] மறுப்பு**

இதே[illegible]

சிவநேசன் எம்.பி மீதான கிளைமோர் தாக்குதலை படையினரின் ஆழ ஊடுருவும் அணியினரே மேற்கொண்டனர் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால், இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள இராணுவம் ''இந்தச் சம்பவம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நடத்திருப்பதால் அதற்கான பொறுப்பை புலிகளே ஏற்கவேண்டும்'' என்று தெரிவித்துள்ளது.

(அ-1-2)

## ஆள்கடத்தல்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் அரசுப் படைகளுக்கும் இடையில் 2006 இல் யுத்தம் வெடித்தபின்னர் இலங்கைப் படைகளும், அரசு சார்பு ஆயுதக் குழுக்களும் பல நூற்றுக்கணக்கில் ஆள்களைக் கடத்தியுள்ளன அல்லது காணாமற் போகச் செய்துள்ளன. அவர்களில் பலர் உயிரிழந்து விட்டனர் என அஞ்சப்படுகின்றது என்றும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டுகின்றது.

'தொடர்ந்து நிகழும் பயங்கரம்: இலங்கையில் காணாமற் போகச் செய்தல் கடத்த[illegible]ல் அரசின் பொறுப்பு' என்ற தலைப்பில் 241 பக்கங்களில் வெளியான இந்த அறிக்கையில், இப்படிக் கடத்திச் செல்லப்பட்டு காணாமற்போன பல நூற்றுக்கணக்கான சம்பவங்களில் 99 சம்பவங்கள் குறித்து ஆராயப்பட்டிருக்கின்றது.

இந்தச் சம்பவங்கள் குறித்து அரசுத் தரப்பின் பதில் அல்லது பிரதிபலிப்பு போதுமானதல்ல என்றும் அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

2006, 2007 இல் காணாமற் போனோர் பற்றிய புதிய முறைப்பாடுகளில் இலங்கையே முன்னிலை வகிக்கின்றது என இவ் விடயத்தை ஆராயும் ஐ.நாவின் செயலணிக்குழு இலங்கையைப் பட்டியலிட்டு முன்னிலைப் படுத்தியுள்ள நிலையில், மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் பிந்திய அறிக்கை இவ்விடயத்துக்காக இலங்கை அரசைக் கடுமையாகச் சாடியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

**மஹிந்த அப்போதும் இப்போதும்**

''மஹிந்த ராஜபக்ஷ ஒரு காலத்தில் மனித உரிமைகளுக்காகப் போராடியவர். ஆனால் இன்றோ பலவந்தமாக ஆள்களைக் காணாமற் போகச் செய்யும் கொடூரத்துக்குக் காரணமான அரசுக்கு அவரே தலைமை வகித்து வழிநடத்துகின்றார்.'' - இவ்வாறு மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிரிவுக்கான பிரதி இயக்குநர் எலைனி பியர்ஸன் கூறுகின்றார். (சி)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்ச்சிகளும் ஆலயங்களில் இடம் பெற்றன.

ஊரடங்கு நடைமுறையில் இல்லாததால் பக்தர்கள் வீதிகளில் நடமாடக் கூடியதாக இருந்ததால் ஆலயங்களில் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் கூடினர். நகரப்பகுதி வீதிகளில் இரவு நேரத்தில் பக்தர்களின் நடமாட்டம் காணப்பட்டது.

அதி உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் அமைந்துள்ள கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திலும் சிவராத்திரி நிகழ்வுகள் இடம்பெற்றன.

நான்கு சாமமும் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வில் சுமார் இரண்டாயிரம் பக்தர்கள் கலந்து கொண்டனர் என மதிப்பிடப்பட்டது.

சேந்தாங்குளம் சோதனை நிலையம் ஊடாகப் பக்தர்கள் ஆலயத்துக்கு சேல்ல அனுமதிக்கப்பட்டனர்.நேற்றுக்காலை முதல் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் ஆலயத்துக்கு சென்ற வ்ண்ணம் இருந்தனர்.

சேந்தாங்குளம் சோதனை நிலையத்தில் இருந்துபக்தர்கள் ஆலயத்துக்கு பஸ்கள் மூலம் கூட்டிச் செல்லப்பட்டனர்.

பகல் முழுவதும் பாடசாலை மாணவர்களின் நாட்டுக்கூத்து, பண்ணிசை, வில்லுப்பாட்டு, கதாப்பிரசங்கம் போன்ற பல நிகழ்வுகள் இடம் பெற்றன.

ஆலயத்தில் இருந்து நகுலேஸ்வரப் பெருமான் இன்று அதிகாலை தீர்த்தக் கரையில் தீர்த்தமாடுவார்.

குடாநாட்டுப் பிரதேசங்களில் உள்ள, கிராமங்களில் உள்ள சிவன் கோயில்களிலும் சிவராத்திரிப் பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.

திருக்கேதீஸ்வரம் ஆலயத்திலும் நேற்று சிவராத்திரி நிகழ்வுகள் பக்திபூர்வமாக இடம் பெற்றன என்று தகவல்கள் தெரிவித்தன.

அங்கு சிவராத்திரி நிகழ்வில் 300 பக்தர்கள் மட்டுமே கலந்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டிருந்தது. கூடுதலான பக்தர்கள் வந்ததை அடுத்து ஆயிரம் பக்தர்கள் விழாவில் கலந்து கொள்ள இறுதி நேரத்தில் அனுமதிக்கப்பட்டனர்.

(அ-1-68)


**G.A.Q 2008/2009**

**யாழ்.பல்கலைக்கழகம் (வெளிவாரி)**

ஆங்கிலம் — இலக்கியம் / மொழியியல்

விரிவுரைகள் ஆரம்பம் : 08.03.2008

விரிவுரையாளர் : சோ பத்மநாதன்

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.


## ஆர்பர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நாவின் சர்வதேச நீதிமன்றத்தின் வழக்குத் தொடுநராகவும் பணியாற்றியிருந்தார்.

இலங்கையில் மனித உரிமைகள் நிலைமை குறித்தும் அவர் விசேட கவனம் செலுத்தி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

## விசாரணைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருகோணமலையில் ஐந்து அப்பாவித் தமிழ்மாணவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டமை, ஜோஸப் பரராஜசிங்கம் எம்.பி. மற்றும் ரவிராஜ் எம்.பி. சுட்டுக்கொல்லப்பட்டமை போன்ற பதினாறு மோசமான சம்பவங்கள் குறித்து ஆராய்வதற்கு விசேட ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை 2006 நவம்பரில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்திருந்தார்.

அந்த விசாரணைக் குழுவின் செயற்பாடுகளைக் கண்காணித்து, உரிய சிபார்சுகளையும், முடிவுகளையும் வெளியிடுவதற்காக, சர்வதேச ரீதியில் சுயாதீனமான பதினொரு பிரமுகர்களைக் கொண்ட அணி ஒன்றையும் ஜனாதிபதி நியமித்தார்.

இந்தியாவின் ஓய்வுபெற்ற நீதியரசர் கே.என்.பகவதி இந்தப் பிரமுகர்கள் அணிக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இந்தப் பிரமுகர் குழுவுக்கான கடைசி உறுப்பினரின் பெயரை இலங்கை அரசு அங்கீகரித்ததை அடுத்து அக்குழு 2007 பெப்ரவரியில் உத்தியோகபூர்வமாக ஸ்தாபிக்கப்பட்டது.

அது ஒவ்வொரு காலாண்டும் தனது அவதானிப்புத் தொடர்பாக கூட்டத் தொடர்களை நடத்திவந்தது. அதன் ஐந்தாவது காலாண்டுக் கூட்டம் கடந்த பெப்ரவரி 17ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெற்றது.

மேற்படி ஜனாதிபதி ஆணைக்குழு தனது பகிரங்க விசாரணையை நடத்துவது தாமதமாகி வந்தது. இதற்காக விசேட சட்டத் திருத்தம் ஒன்று கடந்த பெப்ரவரி 7ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

அதன் பின்னரே மேற்படி பதினாறு மனித உரிமை மீறல் சம்பவங்களில் ஓரிரண்டு குறித்து பகிரங்க விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்நிலையிலேயே, அந்த விசாரணைகள் சர்வதேச தரநிலைகளுக்கும் நியமனங்களுக்கும் அமைய நடைபெறவில்லை என்று குற்றம் சுமத்தி,விசாரணைகள் கண்காணிப்புப் பணியிலிருந்து விலகும் முடிவை சர்வதேசப் பிரமுகர்கள் அணி எடுத்து, அதனை நேற்று பகிரங்கப்படுத்தியிருக்கின்றது.

மேற்படி விசாரணைகளின்போது -

✱ மனித உரிமை மீறல் சம்பவங்களில் பாதிப்புற்றோர் அல்லது அவர்களின் உறவினர்கள் நேரடியாகப் பங்குபற்ற முடியாத நிலைமை -

✱ அத்தகையோரைத் தொடர்பு கொண்டு விசாரணைக்கு அழைத்து வருவதில் ஆணைக்குழு ஈடுபாடு காட்டாமை -

✱ உரிய தரப்பினர் விசாரணைகளுக்கு சாட்சியமளிக்க முன்வராத இக்கட்டு -

✱ முக்கிய தரப்புகள் சாட்சியமளிக்க முன்வந்தும் - அது குறித்து பிரமுகர் குழு தெரியப்படுத்தியும் - அவர்கள் விசாரணைக்கு அழைக்கப்படாமை -

✱ விசாரணைகளுக்குத் தோற்றும் முக்கிய சாட்சிகளுக்கு உரிய பாதுகாப்பு உறுதி வழங்கப்படாமை -

✱ தேவையற்ற கால தாமதமும், இழுத்தடிப்பும் -

- போன்ற பின்னடைவுகள் காணப்பட்டன எனப் பிரமுகர்கள் அணி சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த விசாரணைகளின் போக்குக் குறித்து நேற்று, தான் வெளியிட்ட அறிக்கையில் பல விடயங்களை விவரித்துள்ள அந்தப் பிரமுகர்கள் அணி, இந்த விடயங்கள், மேற்படி ஆணைக்குழுவின் முன்னால் ஒப்படைக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்து ஆராய்ந்து விசாரிப்பதற்குப் போதுமான அரசியல், நிறுவனப்பட்ட திடசங்கற்பம் இல்லை என்ற முடிவையே தனக்குத் தருவதாகவும் தெரிவித்துள்ளது. (சி)


**கணக்கீடு**

A/L 2009

பங்குடைமை

ஆரம்பம் நாளை 12 p.m

A/L 2008 Day

மேற்தலை ஆரம்பம்

நாளை 1 p.m

A/L 2010

காசேடு ஆரம்பம்

நாளை 2p.m

S.தவா

(B.com(Hons) Acc.spl)

**New Science College**

Jaffna.


## பணியைத்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை ஜனாதிப்தியின் நிலைப்பாடு தொடர்பிலான ஆணைக்குழுப் பிரதிநிதிகளின் கருத்து இன்று வெளியாகும் என்று கூறப்பட்டது. (அ-2)

## சிவனேசன் எம்.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏ-9 பாதை மூடப்படிருப்பதால் யாழ்ப்பாணம் கரவெட்டியிலிருந்து தனது மனைவி, பிள்ளைகளுடன் மல்லாவியில் வீடு எடுத்துத் தங்கியிருந்தார். யாழ்ப்பாணத்தில் இருந்தபோது அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அச்சுறுத்தல்கள் இருந்துள்ளன.

நேற்று (நேற்றுமுன்தினம்) நாடாளுமன்றத்தில் அவசரகாலச்சட்ட நீடிப்பு விவாதத்தில் கலந்துகொண்டு எதிர்த்து வாக்களித்துவிட்டு இன்று (நேற்று)காலை மல்லாவிக்கு சென்றுகொண்டிருந்த வேளையில் இக்கொடிய சம்பவம் இடம்பெற்றிருக்கிறது. சென்ற ஆண்டு நடுப்பகுதியிலும் இதே இடத்தில் கிளைமோர்த் தாக்குதலில் இருந்து அவர் அதிஷ்டவசமாக உயிர் தப்பியிருந்தார்.

இச்சம்பவம் திட்டமிட்டுக் குறிவைத்து தாக்கியழிக்கும் திறன்வாய்ந்த இலங்கை இராணுவப் பிரிவான ஆழ ஊடுருவும்.குழுவினாராலேயே செய்யப்பட்டிருக்கிறது என நம்பவேண்டியுள்ளது. இதையொத்த பல சம்பவங்கள் வன்னிப் பிரதேசத்தில் முன்னரும் இடம்பெற்றிருந்தமையைச் சுட்டிக்காட்டவேண்டும்.

**கூட்டமைப்பினர் திட்டமிட்டுக் கொலை**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டக்களப்பில் ஜோசப் பரராஜசிங்கம், கொழும்பில் நடராஜா ரவிராஜ் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சந்திரநேரு, சிவமகாராசா, வேட்பாளர்களாகவிருந்த விக்கினேஸ்வரன், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், உறுப்பினர்கள் பலர் வடக்கு, கிழக்கு பகுதியில் திட்டமிட்டுப் படுகொலை செய்யப்பட்டுவருவதை இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளோம். தமிழ் இனத்தின் உரிமைக்காக குரல் கொடுப்பவர்கள் கொலை செய்யப்படுவது மட்டுமல்ல காணாமல் போவோர், மனித உரிமை ஆணையகத்தில் சரணடைவோர் எண்ணிக்கையும் நாள்தோறும் அதிகரித்துவருகின்றன.

எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொலை அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருவதையும் நாடாளுமன்ற உறுப்பினர் தனது ஜனநாயகக் கடமைகளை நிறைவேற்ற தடைகள் ஏற்படுத்தப்படுவதையும் நாடாளுமன்றத்திலும், சபாநாயகரிடமும் பல முறை முறையிட்டும் பயனற்றதாகிவிட்டது. இவ்வாறு தொடர்ந்து எமது உறுப்பினர்கள் கொலைக்கும் அச்சுறுத்தலுக்கும் ஆளாக்கப்பட்டு வருவதன் மூலம் தமிழ் இனத்தின் உரிமைக்காக - விடுதலைக்காக குரல் கொடுப்பதை, போராடுவதைத் தடுத்து நிறுத்திவிட முடியாது என்பதை இச்சந்தர்ப்பத்திலும் தெரிவித்துக்கொள்கிறோம்.

சிவநேசனின் இழப்பு எவ்வகையிலும் ஈடுசெய்ய முடியாததாகும். அன்னாரினால் கொடுக்கப்பட்டிருக்கும் மதிப்பற்ற தியாகம் ஒருபோதும் வீண்போகாது தமிழ்த் தேசத்தின் விடுதலைக்கே வித்தாகும் என்பதில் ஐயமில்லை.

மனைவி, மக்கள், அன்புடையோர், ஆதரவாளர்களின் துன்பத்திலும் துயரத்திலும் கலந்து எமது இதயபூர்வமான கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தி நிற்கின்றோம்.

- என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)


**PERSONAL CLASS**

362, Stanley Rd.

Jaffna

விசேட சிங்களம்

CD மூலமான உச்சரிப்புப் பயிற்சி

உத்தியோகத்தர், மாணவர்கள்

3 மாதப் பயிற்சி

BY: சிங்களம் பயிற்றப்பட்ட ஆசிரியர்

K.கார்த்திக்கேய

ஆரம்பம் நாளை 10மணி

Mon⇒ Fri 9.00-12.00

Sat, Sun 8.00-5.00p.m

வகுப்புகள் நடைபெறும்.



**BEACON** யாழ்.நகர்

(பெருமாள் கோயில் அருகில்)

A/L 2010, 2009, 2008 & Day Batch

வர்த்தகப் பிரிவு

ஆரம்பம் 08/03

சனி காலை 8

வணிகக் கல்வி: பாலசபேஸ்

கணக்கீடு : பாலகஜன்

பொருளியல் : குமார்

(தனிப்பட்ட அனுமதி வழங்கப்படும்)

Paper Class (2008 &2009)

B.St. : sat, sun 10am

ACC.: mon,wed 2.30 p.m.

ECO.: sat,sun 12pm

✱ துரித மீட்டல் வகுப்புக்கள்

✱ பாட அலகு அனைத்தும் பரீட்சைக்கு முன்னர் முடிக்கப்படும்.

✱ கருத்தரங்கு விரைவில்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.03.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.